நோக்கம் உந்தும் வாழ்க்கையிலிருந்து...

இவ்வுலகில் நான் எதற்காய்?

ரிக் வாரன்

THANKS TO OUR ALMIGHTY GOD. MAY GOD BLESS YOU AND MAY HOLY SPIRIT LEAD YOU

To the Readers

Dear Beloved Brother/Sister, Thank you for downloading this Ebook. Please note that this Ebook is copyrighted by the author of the book or the publisher of the book or as mentioned in the book. Word of God Ministries is just providing you this ebook as free of cost and it is for your personal use not for commercial purposes.

To the Copyright Owners

Dear Copyright owners, Word of God Ministries is doing this Free Ebook service to help the people who are not able to find the printed copy of your book from various countries arround the world and to the people who are restricted to have the printed materials in their house. And this will help the readers to improve their spiritual life.

If you want your new books to be published here as Free Ebook, kindly EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489

If you feel that your book should not be published, we are KINDLY REQUESTING YOU TO EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489. We will remove it from our Free Service as early as possible.

About Word of God Ministries

Word of God Ministries was founded in the year 2007, July 29th with the grace and leading of Almighty God by Bro. Yesudas Solomon as an interdenominational ministry. The popular ministry "**Word of God Team**" is one among our various ministries. Now this ministry has 10 branches such as **1)** Word of God Team, **2)** Mobile Ministry, **3)** Internet Ministry, **4)** Deaf Ministry, **5)** Blind Ministry, **6)** Tribal Ministry, **7)** Computer Ministry, **8)** Audio Ministry, **9)** Video Ministry and **10)** Printing Ministry. We all thank our God with full of our heart for using us in His Great Ministry. We need your continuous prayer support. Our vision is to "Reach the Unreached through Technology". Our websites are: www.WordOfGod.in, www.ChristiansMobile.com, www.FreeChristianEbooks.in, www.IndianBibles.net, www.ChristianAudioBooks.in, www.WordOfGodTeam.com, www.WordOfGodMinistry.in, www.KannadaBible.net, www.KannadaChristian.net, www.PrayForKarnataka.com

S. Angelmerlin

நோக்கம் உந்தும் வாழ்க்கையிலிருந்து...

இவ்வுலகில் நான் எதற்காய்?

ரிக் வாரன்

ZONDERVAN
GRAND RAPIDS, MICHIGAN 49530 USA

What on Earth Am I Here For?
Copyright @ 2002, 2004 by Rick Warren

Requests for information should be addressed to:

Zondervan, Grand Rapids, Michigan 49530

ISBN 0-310-60938-0
Tamil Translation

All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted in any form or by any means - electronic, mechanical, photocopy, recording, or any other - except for brief quotations in printed reviews, without the prior permission of the publisher.

Illustrations by Michael Halbert,
Copyright @ 2002 Michael Halbert



இவ்வுலகில் நான் எதற்காய்?

இது எல்லாம் கடவுளோடு தொடங்குகிறது

இது உங்களைப் பற்றியதல்ல...

உங்கள் சொந்த ஆசை நிறைவேறுதல், மனரம்மியமான வாழ்க்கை மற்றும் சந்தோஷமான வாழ்க்கை இவை எல்லாவற்றிற்கும் மேலானது வாழ்க்கையின் நோக்கமாகும். அது உங்கள் குடும்பத்தை விட, வேலையை விட, ஆசைகள் மற்றும், தீவிரமான கனவுகளை விட மிகவும் உன்னதமானது. இந்த கோளில் (பூமியில்) நீங்கள் எதற்காக வைக்கப்பட்டிருக்கிறீர்கள் என அறிய வேண்டுமென்றால், நீங்கள் கடவுளோடு தான் ஆரம்பிக்க வேண்டும். அவருடைய நோக்கத்தினாலும் அவருடைய நோக்கத்திற்காகவும் நீங்கள் பிறந்திருக்கிறீர்கள்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வாழ்க்கையின் நோக்கத்தை தேடுவது ஒரு புதிராகவே இருக்கிறது. ஏன் என்றால் நாம் தவறான புள்ளியிலிருந்து ஆரம்பிக்கிறோம். - நமது சுயத்தை மையமாய் வைத்து கேள்விகளைக் கேட்கிறோம். நான் எப்படியிருக்கப் போகிறேன்? நான் என் வாழ்க்கையை வைத்து என்ன செய்யப் போகிறேன்? எனது எதிர்காலத்திற்கான எனது நோக்கம், எனது விருப்பம், என் சொப்பனம் என்ன? நமது வாழ்க்கையையே மையமாய் வைத்தால், நமது வாழ்க்கையின் நோக்கத்தை நாம் கண்டு கொள்ள முடியாது. வேதம்

சொல்லுகிறது: *சகல பிராணிகளின் ஜீவனும், மாம்சமான சகல மனுஷரின் ஆவியும் அவர் கையிலிருக்கிறது. யோபு12:10.*

பல புகழ் பெற்ற புத்தகங்கள், சினிமா படங்கள் மற்றும் கருத்தரங்குகள் சொல்வதற்கு மாறாக, **நீங்கள் உங்கள் வாழ்க்கையின் அர்த்தத்தை உங்களுக்குள் பார்ப்பதால் கண்டுபிடிக்க முடியாது.** ஒருவேளை அதை நீங்கள் முயற்சித்து இருக்கலாம். உங்களை நீங்களே படைக்கவில்லை, ஆகவே நீங்கள் எதற்காக படைக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதை அறிய வழியேதும் இல்லை. நான் உங்கள் கையில் என்றும் பார்த்திராத ஒரு புதிய கண்டுபிடிப்பை கொடுத்தால், அது படைக்கப்பட்டதன் நோக்கம் உங்களுக்கு தெரியாது. ஆனால் அதை படைத்தவர் அல்லது அதன் சொந்தக்காரர் மட்டுமே அதன் நோக்கத்தை வெளிப்படுத்த முடியும்.

ஒருமுறை நான் மலைகளுக்கிடையில் தொலைந்துபோய்விட்டேன். நான் போகவேண்டிய கூடாரத்திற்கு வழி கேட்டபோது **இங்கிருந்து நீங்கள் அங்கே செல்லமுடியாது.** நீங்கள் மலையின் மறுபக்கத்திலிருந்து தொடங்க வேண்டுமென பதில் கிடைத்தது. அதேபோல உங்களுடைய வாழ்க்கையின் நோக்கத்தை உங்களுக்குள் பார்ப்பதிலிருந்து தொடங்க முடியாது. நீங்கள் உங்களை படைத்தவராகிய கடவுளிடமிருந்துதான் தொடங்க வேண்டும், கடவுள் சித்தங்கொண்டதால் தான் நீங்கள் வாழுகிறீர்கள். நீங்கள் **கடவுளாலும், கடவுளுக்காகவும்** படைக்கப்பட்டிருக்கிறீர்கள் - அதை அறிந்துகொள்ளும் வரையில், வாழ்க்கை அறிவுப்பூர்வமாய் இருக்க முடியாது. நமது ஆரம்பம், அடையாளம், அர்த்தம், நோக்கம், தனித்தன்மை, முடிவு ஆகியவற்றை கடவுளைக் கொண்டு மட்டுமே கண்டுபிடிக்க முடியும். மற்ற எந்த பாதையும் தடை உள்ளதாயிருக்கும்.

தங்களை நிறைவுபடுத்தவே கடவுளை கருவியாய் உபயோகிப்பவர் அநேகர். அவர்கள் தனது சுய நோக்கத்தை நிறைவேற்றும் சொந்த மாய வித்தைக்காரனாகவே கடவுளைப் பார்க்கின்றனர். ஆனால் அது இயற்கைக்கு மாறானது, தோல்வியின் மறுவுருவம் ஆகும். நீங்கள் கடவுளுக்காக உண்டாக்கப்பட்டவர்களே தவிர அவர் உங்களுக்காக அல்ல. **வாழ்க்கை என்பது கடவுள் தனது நோக்கத்தை உங்களில் நிறைவேற்ற அனுமதிப்பதே தவிர, அவரை உங்களது நோக்கத்தை நிறைவேற்ற பயன்படுத்துவது அல்ல.** வேதம் சொல்லுகிறது: *மாம்சசிந்தை மரணம் ; ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம். (ரோமர் 8:6).*

இதன் பொருள் என்னவென்றால் என்னைப் பற்றியே நினைக்கும் சுய எண்ணங்களின் முடிவு மரணமே. கடவுளை கவனிக்கும் சிந்தை நம்மை திறந்தமனமான, விசாலமான, சுதந்திரமான வாழ்க்கைக்கு அழைத்துச் செல்லும்.

என் வாழ்க்கையின் நோக்கத்தை கண்டுபிடிக்க வழிகாண்பிக்கும் பல புத்தகங்களைப் படித்திருக்கிறேன். ஆனால் அவை எல்லாவற்றையும் "*சுயவுதவிப் புத்தகங்கள்*" என அட்டவணைப் படுத்தலாம். ஏனென்றால் அவை யாவும் சுயத்தை மையமாகக் கொண்ட பாடங்களைக் கொண்டவை ஆகும். இயல்பாக, சுயவுதவிப் புத்தகங்கள் நமது வாழ்க்கையின் நோக்கத்தைக் கண்டுபிடிக்க ஒரே மாதிரியான படிகளைக் கொண்டதாயிருக்கும். உங்கள் கனவுகளை கவனியுங்கள், நீங்கள் எதில் சிறந்தவர்கள் என்று நிரல்வரைபடம் போடுங்கள். மதீப்பீடுகளை திட்டம் பண்ணுங்கள், சில இலக்குகளை வையுங்கள், உயர்ந்த நோக்கம் கொள்ளுங்கள், நீங்கள் அதை அடைய முடியுமென்று நம்புங்கள். வாழ்க்கையை சீர்படுத்துங்கள், கைவிட்டு விடாதிருங்கள்.

நிச்சயமாகவே, இப்படிப்பட்ட பரிந்துரைகள் நல்லவை, பல நேரங்களில் பெரிய வெற்றிக்கு நேராக நம்மை நடத்திச்செல்வன. நீங்கள் அதிலே மனதை வைத்தால் நீங்கள் வைத்திருக்கும் இலக்கையும் அடையலாம். **உங்கள் வாழ்க்கையின் நோக்கமும், நீங்கள் வாழ்க்கையில் வெற்றிபெறுவதும் முற்றிலும் மாறுபட்ட கருத்துக்கள் ஆகும்!** நீங்கள் தனிப்பட்ட முறையிலே வைத்த இலக்குகளை அடைவதன்மூலம், உலகத்தரத்திலும் வெற்றி முழக்கமிடலாம்; ஆனாலும் கடவுள் உங்கள் வாழ்வில் வைத்த நோக்கத்தை நிறைவேற்றாமலிருக்கலாம்.

இதிலே சுயவுதவிக்கு மேலான அறிவுரை உங்களுக்குத் தேவை. இயேசு கிறிஸ்து கூறுகிறார்: சுயவுதவி உதவாது. உங்களை கண்டுபிடிக்க, உண்மையான உங்களைக் கண்டுபிடிக்க சுயத்தை தியாகம் செய்வதே வழி, அதுவே எனது வழி என்கிறார்.இவ்விளக்கம் கீழ்க்காணும் வசனத்தை அடிப்படையாகக் கொண்டது. *தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் கண்டடைவான் (மத்தேயு 16:25).*

சரியான வேலையை கண்டுபிடித்தல், உங்கள் கனவை நனவாக்குதல், உங்கள் வாழ்க்கையை திட்டமிடுதல் போன்றவற்றை கற்பிக்க இப்புத்தகம் எழுதப்படவில்லை. உங்களது நெருக்கமான நேரப்பட்டியலில் எப்படி இன்னும் பல செயல்பாடுகளை நுழைப்பது என்பது பற்றியும் இல்லை. உங்கள் வாழ்க்கையின் நோக்கத்தை உண்மையில் அறிந்துகொண்டால் முக்கியமானதை தெளிவாக்கி, நீங்கள் குறைவாக செயல்பட்டாலே போதுமானது. அது கடவுள் உங்களைப் படைத்ததின் நோக்கத்திற்கு நீங்கள் உங்களை மாற்றிக் கொள்ளுவதாகும்.

நீங்கள் படைக்கப்பட்ட நோக்கத்தை எப்படி கண்டுபிடிப்பது? அதற்கு இரண்டு வழிகளே உண்டு. முதல் வழி யூகித்தல் ஆகும். பலர் இந்த கட்டத்தில்தான் காணப்படுகிறார்கள். அவர்கள் வாழ்க்கையின் நோக்கத்தை யூகிப்பது, அல்லது

கற்பனை செய்வது அல்லது நடைமுறைப்படுத்த முடியாத கொள்கையாக கருதுகின்றனர். என் வாழ்வின் நோக்கம்... இதுதான் என்று ஒருவர் சொல்லுவாரானால், "*அவர் உண்மையிலேயே சொல்லுவது என்னவென்றால் ஓர் சிறந்த யூகத்தை உருவாக்கியுள்ளார்*" என்பதே.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அறிவில் சிறந்த தத்துவஞானிகள், வாழ்க்கையின் அர்த்தம் என்ன என்று வாடினார்கள். தத்துவம் ஓர் முக்கியமான பாடம், அது பயனுள்ளது, ஆனால் வாழ்வின் நோக்கத்தைப் பற்றி அது தீர்மானிக்க வரும்போது, அறிவில் சிறந்த விஞ்ஞானிகள்கூட வெறும் யூகம்தான் செய்கின்றனர்.

வட இல்லினாய்ஸ் பல்கலைக் கழகத்தை சேர்ந்த அறிவர் ஹக் மூர்ஹெட் (Dr.Hurge Moorehead) என்ற தத்துவப் பேராசிரியர், ஒருமுறை உலகிலுள்ள தலைசிறந்த 250 தத்துவஞானிகள், விஞ்ஞானிகள், எழுத்தாளர்கள் மற்றும் அறிவில் தேறியவர்களுக்கு எழுதிக்கேட்ட கேள்வி என்னவென்றால் "*வாழ்க்கையின் அர்த்தம் என்ன?*" அவர்களுடைய பதில்களை ஒரு புத்தகமாக வெளியிட்டார். ஆனால் அது மிகவும் சோர்வுக்குள்ளாக்கியது. இந்த சிறந்த ஞானிகளில் சிலர் மிகச்சிறந்த யூகங்களை பதிலாய் எழுதியிருந்தனர். அவர்களில் சிலர், இப்போதுதான் அதைக் கண்டுபிடிக்க ஆரம்பிக்கிறேன் என்றும். சிலர் அதைப் பற்றி எதுவும் தெரியவில்லை என்று ஒத்துக்கொண்டும் இருந்தனர். உண்மை என்னவெனில் எண்ணிறந்த ஞானிகள்,

அறிஞர்.மூர்ஹெட்டிடம் மறுபடியும் எழுதி - வாழ்க்கையின் நோக்கத்தை நீங்கள் கண்டுபிடித்தால் எங்களுக்கு சொல்லுங்கள் என்று எழுதினர்.

அதிர்ஷ்டவசமாக, வாழ்க்கைக்கான நோக்கத்தின் யூகத்தை கண்டுபிடிக்க, வேறு சிறந்த வழி உள்ளது. **ஓர் கண்டுபிடிப்பின் நோக்கத்தை அறிய வேண்டுமெனில் அதைப் படைத்தவரிடம் விளக்கம் கேட்க வேண்டும்.** அதே வழி முறையையே உங்கள் வாழ்வின் நோக்கத்தை கண்டுபிடிக்க பயன்படுத்த வேண்டும். உங்களைப் படைத்த கடவுள், உங்கள் வாழ்க்கையைப் பற்றி தன் வாசகங்கள் அடங்கிய சத்திய வேதத்தில் கூறியிருப்பதைக் காணலாம். எந்த நாளானாலும் வெளிப்பாட்டிற்குமுன் யூகிப்பது அடிபட்டு விடும்.

கடவுள் நம்மை இருட்டில் விட்டுவிட்டு நம்மை யூகிக்கவும், வியக்கவும் விடவில்லை. வேதத்தின் மூலமாக நம்முடைய வாழ்வின் ஐந்து நோக்கங்களை வெளிப்படுத்தியிருக்கிறார். நாம் ஏன் உயிரோடு இருக்கிறோம், வாழ்க்கை எப்படி செயல்படுகிறது, எதை தவிர்க்க வேண்டும், எதிர்காலத்தில் எதை எதிர்பார்க்க வேண்டும் போன்றவற்றை உள்ளடக்கிய நம்மை படைத்தவரின் கையேடே வேதமாகும். சுயவுதவி, அல்லது தத்துவப் புத்தகங்கள் அறியாதவற்றை வேதம் அறிவிக்கிறது. கடவுளின் ஞானம்... நோக்கத்தின் உள்ளே ஆழமாய் கடந்து செல்லும்... அது இப்போதைய செய்தியல்ல, பழைமையான செய்தி போன்றதே - கடவுள் எனக்கு

மிகச் சிறப்பாய் என்ன திட்டம் பண்ணினாரோ அதை செய்து முடிப்பார். *அப்படியிருந்தும், தேறினவர் களுக்குள்ளே ஞானத்தைப் பேசுகிறோம்; இப்பிரபஞ்சத்தின் ஞானத்தையல்ல, அழிந்து போகிறவர்களாகிய இப்பிரபஞ்சத்தின் பிரபுக்களின் ஞானத்தையுமல்ல, உலகத்தோற்றத்திற்கு முன்னே தேவன் தம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தினதும், மறைக்கப்பட்டதுமாயிருந்த இரகசியமான தேவஞானத்தையே பேசுகிறோம். (1கொரிந்தியர் 2:6,7).*

கடவுள் உங்களுடைய வாழ்க்கையின் ஆரம்பம் மட்டுமல்ல, அவர்தான் அதன் ஊற்றானவர். உங்கள் வாழ்வின் நோக்கத்தையறிய நீங்கள் அவருடைய வார்த்தைக்கு திரும்ப வேண்டுமே தவிர, உலகில் சிறப்பான யூகங்களுக்கு அல்ல. உங்கள் வாழ்க்கையை உலகின் மாறும் கருத்துகள், புதிதாய் தோன்றி மறையும் மனோதத்துவங்கள், வெற்றிக்கு உந்தும் கருத்தரங்குகளின்மேல் கட்டாமல் என்றும் மாறாத நிரந்தர உண்மைகளுக்கு மேலாக கட்டுங்கள். வேதம் சொல்லுகிறது: *கிறிஸ்துவுக்குள் மட்டுமே நாம் யார் என்றும், நாம் எதற்காய் வாழுகிறோமென்றும் கண்டுபிடிக்க முடியும். நாம் கிறிஸ்துவைப் பற்றி கேள்விப்பட்டு அவர் மூலமாக நாம் நம்பிக்கை பெற்றதிலிருந்து, அவரது கண்கள் நம்மீது வைக்கப்பட்டு, நம்மை வடிவமைத்து மகிமையான வாழ்க்கைக்கு நேராய் வழிநடத்தி, கடவுளின் மாபெரும் நோக்கத்தில் நம் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்றிற்குமுள்ள பங்கை நியமிக்கிறார்.*

*எபேசியர் 1:8-11*ன் அடிப்படையில் இந்த வசனம் மூன்று வெளிப்பாடுகளை நமக்குத் தெரிவிக்கிறது.

முதலாவதாக, **நான் யார் என்றும், எனது நோக்கம் என்ன என்பதையும் இயேசு கிறிஸ்துவிலுள்ள உறவினாலே கண்டு பிடிக்கலாம்.** அப்படிப்பட்ட உறவு கிறிஸ்துவில் உங்களுக்கு இல்லாதிருந்தால், அதை ஆரம்பிப்பதை பிற்பாடு உங்களுக்கு சொல்லுகிறேன்.

இரண்டாவதாக, **கடவுளைப்பற்றி நீங்கள் நினைப்பதற்கு மிகமிக முன்னதாகவே அவர் உங்களைப்பற்றி நினைத்துள்ளார்.** நீங்கள் உருவாகிறதற்கு முன்னானது உங்கள் வாழ்க்கையின் நோக்கம். உங்களுடைய உதவியில்லாமல் உங்களது உயிர் வருவதற்கு முன்பாகவே அவர் திட்டம் பண்ணிவிட்டார்! உங்களது வேலை, உங்கள் **வாழ்க்கைத் துணை, உங்கள் பொழுதுபோக்கு, வாழ்க்கையின் பல பகுதிகளை நீங்கள்** தேர்ந்தெடுக்கலாம், ஆனால் உங்கள் வாழ்க்கையின் நோக்கத்தை நீங்கள் தேர்ந்தெடுக்கவில்லை.

மூன்றாவதாக, **உங்களது வாழ்க்கையின் நோக்கமானது கடவுளின் மிகப்பெரிய நோக்கத்தில், அவரது பரந்த திட்டத்தில்,** இணைக்கப்பட்டு நித்தியத்திற்கென வடிவமைத் திருக்கிறார். இந்த புத்தகத்தின் நோக்கமே அதுதான்.

ரஷ்யாவைச் சேர்ந்த நாவலாசிரியர் அன்றி பிட்டோவ் (Andri Bitov) கடவுளை நம்பாத ஓர்

அரசாங்கத்தின் கீழாக வளர்ந்தவர். ஆனால் ஒரு வறண்ட நாளொன்றில் கடவுள் அவரை சிந்திக்க வைத்தார். அவர் மனதில் மறுபடி ஒலித்த சிந்தை என்னவெனில், எனது 27ம் வயதில் லெனிங்கரட் என்று அழைக்கப்பட்ட புனித பீட்டர்ஸ்பர்க் (St.Petersburg) பட்டணத்தில் நான் வாகனத்தை ஓட்டி செல்லும்போது சோர்வு என்னை மிகவும் மிஞ்சிவிட்டதால், என் வாழ்க்கை இப்பொழுதே முடிந்துவிடப்போகிறது என்று எண்ணிய சமயத்தில், என் எதிர்காலத்தை முற்றும் துறப்பதே அர்த்தமுள்ளது என்று நினைத்த மாத்திரத்தில்: **கடவுள் இல்லையெனில் வாழ்வில் அர்த்தமில்லை** என்ற பதம் எனக்குமுன் தோன்றியது. வியப்போடு அதை மறுபடி உச்சரித்தேன், அதேப் பதத்தை ஒரு தானியங்கிப் படிக்கட்டில் (Escalator) மேலே செல்லுவது போன்று உணர்ந்தேன், அந்த பட்டணத்தைக் கடந்தவுடன், கடவுளின் வெளிச்சத்திற்குள் நடந்தேன். (David Friend, ed ., The Meaning of Life (Boston : Littel, Browin, 1991)

உங்கள் வாழ்வின் நோக்கம் காரிருளின் உருவமாய் தோன்றலாம். வாழ்த்துக்கள் நீங்கள் வெளிச்சத்திற்குள்ளாய் நடக்கப்போகிறீர்கள். தொடர்ந்து வாசியுங்கள்.

சிந்தனை சிறக்க:

கடவுள் இல்லை என்றால் எல்லாமே தோராயமான தேர்ந்தெடுப்பின் முடிவாகிவிடும், வாழ்க்கையில் **நோக்கம்** என்பதே இருக்க முடியாது. எல்லாமே கடவுளோடுதான் தொடங்குகின்றது.

- நீங்கள் எப்போதாவது உங்கள் வாழ்க்கையின் நோக்கத்தைப் பற்றி வியந்ததோ அல்லது குழம்பினதோ உண்டா?
- வாழ்க்கையின் நோக்கத்தை கண்டுபிடிக்க நீங்கள் கையாண்ட முறை என்ன? அது எப்படி செயல்படாமல் போயிற்று?
- வாழ்க்கையின் நோக்கத்தைக் கண்டுபிடிக்க முயற்சிப்பவர்கள் தன்னைப் படைத்த கடவுளிடம் திரும்பாமலிருக்கக் காரணம் என்னவென்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

இந்த கேள்விகளைப்பற்றி ஆழமாய் அறிய விரும்பினால் எங்களை www.purposedrivenlife.comல் சந்தியுங்கள்.

நீங்கள் தவறுதலாகப் பிறந்தவர் அல்ல!

நீங்கள் தவறுதலாகப் பிறந்தவர் அல்ல.

உங்களது பிறப்பு தவறானதோ, தவறிநடந்ததோ அல்ல. உங்களது பெற்றோர்கள் உங்களைக்குறித்து திட்டமிடாமல் இருந்திருக்கலாம், அதனால் கடவுள் உங்களைத் திட்டமிடவில்லை என்பது பொருளல்ல. அவர் மனிதனுடைய குறைகளின் மூலமாகவும் தவறுகளின் மூலமாகவும் செயல்படுகிறார். உங்களது பிறப்பு அவருக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கவில்லை. அதற்கு மாறாக, உங்கள் பிறப்பிற்காக அவர் எதிர்பார்த்திருந்தார்.

இப்போது நீங்கள் சுவாசித்துக்கொண்டிருப்பது, ஏதோவொரு விதியோ, தருணமோ, அதிர்ஷ்டமோ, அல்லது ஏதேச்சையாய் நடப்பதோ அல்ல. **நீங்கள் உயிரோடிருக்க வேண்டும் என்று விரும்பி கடவுள் உங்களைப் படைத்திருக்கிறார்.** வேதம் சொல்லுகிறது: *கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார். (சங்கீதம் 138:8).*

உங்கள் உடலிலுள்ள உறுப்புகளின் ஒவ்வொரு விளக்கத்தையும் கடவுளே கட்டளையிட்டார். நீங்கள் பிறந்த ஜாதி, உங்கள் தோலின் நிறம், உங்கள் முடி, மற்றும் உள்ள ஒவ்வொரு காரியத்தையும் அவர் வேண்டுமென்றே முடிவெடுத்தவைதாம். உங்களில் இயற்கையாய் காணப்படுகின்ற தாலந்துகள்,

திறமைகள், உங்கள் தனிப்பட்ட தன்மைகள் எல்லாவற்றையும் அவரேதான் முடிவெடுத்தார். வேதம் சொல்லுகிறது: *நீர் என்னை உள்ளும் புறமும் அறிந்திருக்கிறீர், என் உடம்பிலுள்ள ஒவ்வொரு எலும்புகளையும் அறிந்திருக்கிறீர். நான் எப்படி உருவாக்கப்பட்டேன் என்பது பற்றி அணு, அணுவாக உமக்குத் தெரியும். நான் ஒன்றும் இல்லாததிலிருந்து எப்படி செதுக்கப்பட்டு இன்று இருக்கிறேன் என்பதும் உமக்கு மறைக்கப்படவில்லை (சங்கீதம் 139:15,16).*

ஏனென்றால் என்னை ஒரு காரணத்திற்காக படைத்து, நான் **எப்போது** பிறக்க வேண்டும் என்றும் **எவ்வளவு காலம்** வாழவேண்டும் என்பதையும் திட்டம் பண்ணினார். நீங்கள் பிறக்கவேண்டிய, இறக்க வேண்டிய நேரங்களை வைத்து, உங்களது வாழ்க்கையை அவர் முன்னதாகவே திட்டம் பண்ணிவிட்டார். வேதம் சொல்லுகிறது: *நான் பிறப்பதற்குமுன்பே நீர் என்னைப் பார்த்து, நான் சுவாசிக்கத் தொடங்கும்முன்பே எனது ஒவ்வொரு நாளையும் திட்டம் பண்ணினீர். ஒவ்வொரு நாளும் உமது புத்தகத்தில் பதிவுசெய்யப்பட்டுவிட்டன. (சங்கீதம் 139:16).*

நீங்கள் **எங்கு** பிறக்க வேண்டும் என்றும், அவருடைய திட்டத்தை நிறைவேற்ற நீங்கள் எங்கு வாழவேண்டும் என்றும் அவர் திட்டம் பண்ணியிருக்கிறார். நீங்கள் பிறந்த ஜாதியும், நாடும் திட்டம் பண்ணப்படாதது அல்ல. எதையும் அவர் ஏனோதானோவென்று செய்யவே இல்லை.

எல்லாவற்றையும் தனது நோக்கத்திற்காக திட்டம் பண்ணிவிட்டார். வேதம் சொல்லுகிறது: *மனுஷ ஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி, பூமியின் மீதெங்கும் குடியிருக்கச்செய்து, முன் தீர்மானிக்கப் பட்டக் காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார். (அப்போ.17:26).* உங்கள் வாழ்க்கையில் எதுவும் தெளிவில்லாமல் செய்யப்படவில்லை, எல்லாமே ஒரு நோக்கத்தோடு செய்யப்பட்டிருக்கிறது.

மிக ஆச்சரியமானது என்னவென்றால், நீங்கள் எப்படிப் பிறக்கவேண்டும் என்பதை கடவுள் தீர்மானித்தது ஆகும். உங்களது சூழ்நிலைகள், உங்களது பெற்றோர்கள் இவையெல்லாவற்றையும் தாண்டி உங்களை உருவாக்கினதற்கு திட்டம் கொண்டிருந்தார். உன்னுடைய பெற்றோர்கள் நல்லவர்களா அல்லது கெட்டவர்களா அல்லது புரிந்து கொள்ள முடியாதவர்களா என்பது முக்கியமல்ல. உங்கள் பெற்றோர்கள் எப்படிபட்ட சரியான அமைப்பு பெற வேண்டும் என்றும், உங்களை எந்த பாரம்பரியத்தில் பிறக்கவைத்தால், எந்த கலாச்சாரத்தில் **நீங்கள்** வளருவீர்கள் என்பதையும் அவர் மனதில் கொண்டிருந்தார். அவர்களுடைய மரபணு (DNA) எப்படியிருந்தால் உங்களை அவர் விரும்பும்படி வடிவமைக்கலாம் என்றும் அறிந்திருக்கிறார், **"முறைகேடான பெற்றோர்கள் இருக்கலாம்,ஆனால் முறைகேடான பிள்ளைகள்**

இல்லை". சில பிள்ளைகள் பெற்றோர்களால் திட்டம் பண்ணப்படாமல் பிறந்திருக்கலாம். ஆனால் அவர்கள் கடவுளால் திட்டம் பண்ணப்படாதவர்கள் அல்ல.

கடவுளின் நோக்கமானது மனிதனுடைய தவறுகளையும், அவனது பாவத்தையும் கணக்கில் கொள்ளுகிறது. ஆகவே, கடவுள்தான் பாவத்திற்கும், தீமைக்கும் காரணமானவர் அல்லது பாவத்திற்கு பாராமுகமாய் இருப்பார் எனவும் எண்ணக்கூடாது. அவர் அப்படிப்பட்டவரல்ல. ஆனால் எந்த சூழ்நிலையிலிருந்தும் அவர் நம்மை மீட்டு, தீமையை அவருக்கு சாதகமாக மாற்றிக்கொள்ளுவார்.

ஆகவே, உங்களுடைய பிறப்பின் சூழ்நிலைகளை மனதில் கொள்ளாது, கடவுள்தான் உங்களைப் படைத்தார் என்றும் நீங்கள் நீங்களாகவே இருக்கவே படைத்தார் என்றும் கொண்டாடி மகிழுங்கள். கடவுள் எதையும் திட்டமிடாமல் செய்யவில்லை, அவர் தவறு செய்யவும் இல்லை. அவர் படைத்த ஒவ்வொன்றையும் ஒரு காரணத்திற்காகவே படைத்தார். மனுக்குலத்திலுள்ள ஒவ்வொருவரையும் அவர் மனதில் ஒரு திட்டம் வைத்துதான் படைத்தார். கடவுள் உன்னை படைத்ததின் நோக்கம் அவருடைய அன்பினாலே. வேதம் சொல்லுகிறது: *உலகத்தை அஸ்திபாரமிடுவதற்கு முன்பே நம்மை நினைத்து, நம்மை அவரது அன்பின் நோக்கத்திற்காக தெரிந்து கொண்டார் (எபேசியர் 1:4).*

கடவுள் இந்த உலகத்தை படைப்பதற்கு

முன்பாகவே உங்களைப் பற்றி நினைவாயிருந்தார். அதனால்தான் அவர் படைத்தார். இந்த உலகமாகிய கோளை நாம் வாழுவதற்கு ஏற்றாற்போல் வடிவமைத்தார். அவரது அன்பை நமக்கென்றே வைத்தார். நாமே அவரது படைப்பில் உன்னதமானவர்கள். வேதம் சொல்கிறது: *சத்திய வசனத்தினாலே கடவுள் ஜீவன் கொடுப்பதால் அவரது படைப்பில் மனிதவர்க்கமே தலைசிறந்ததாய்க் காணப்படுகிறது* (யாக்கோபு 1:18). இது, கடவுள் எவ்வளவாய் உங்களிடத்தில் அன்பும், மதிப்பும் வைத்துள்ளார் என்பதை விளக்குகிறது.

ஏதோ செய்ய வேண்டும் என்று கடவுள் எதையும் செய்யவில்லை. எல்லாவற்றையும் மிக நுண்ணியமாக திட்டம் பண்ணியே செயல்பட்டார். பௌதீக விஞ்ஞானிகளும், உயிரியல் விஞ்ஞானிகளும் மற்ற விஞ்ஞானிகளும் அண்ட சராசரத்தைப்பற்றி அதிகமாய் படிக்கப் படிக்க, நாம் நன்றாக வாழ இந்த உலகம் எப்படி தனித்தன்மையுடையதாய்க் காணப்படுகிறது என்றும், **சரியான** குறிப்புகள் எப்படி மனிதவர்க்கத்திற்கு சாதகமாய் உள்ளதென்றும் வியக்கிறார்கள்.

நியூசிலாந்திலுள்ள ஓடகோ (Otago) பல்கலைக் -கழகத்தை சேர்ந்த அறிவர் மைக்கேல் டென்டன் (Dr.Michael Denton) என்ற மூத்த ஆராய்ச்சி வல்லுனர் முடிவுரையில் உயிரியலில் காணப்படும் அத்துனை பரிணாமங்களும் ஓர் ஆழமான காரியத்தை வலியுறுத்துகின்றன. அண்டசராசரம் ஒருமுழுமையாக

சிறப்பாக வடிவமைக்கப்பட்டது. இதிலே ஜீவனும், மனிதவர்க்கமும் அடிப்படையான நோக்கும், இலக்கும் ஆகும். இது எல்லா கோணங்களில் பார்த்தாலும் அர்த்தமுள்ளதாயும் அதை விளக்க வேண்டிய நிர்பந்தமே அதன் முக்கிய உண்மையாகவும் காணப்படுகிறது. (இது, மைக்கேல் டென்டான், என்பவரது Nature's Destiny : How the laws of biol-ogy reveal purpose in th euniverse ; New york; Free press, 1988, page 389லிருந்து கையாளப்பட்டது).

வேதமும் இதை ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே ஆமோதிக்கிறது. *வானங்களைப் படைத்து, பூமியையும் வெறுமையாய் இருக்கச் சிருஷ்டியாமல் அதை குடியிருப்புக்காகச் செய்து படைத்து, அதை உருவேற்படுத்தின தேவனாகிய கர்த்தர்... (ஏசாயா 45:18) என்கிறது.*

கடவுள் ஏன் இதையெல்லாம் செய்தார்? அண்ட சராசரத்திலுள்ள எல்லாவற்றையும் நேர்த்தியாய் நமக்காக ஏன் படைக்க வேண்டும்? ஏனென்றால் அவர் **அன்பான கடவுள்**. இப்படிப்பட்ட அன்பை நம் மனது கற்பனையே செய்ய முடியாது, ஆனால் அதை அடிப்படையாய் நாம் சார்ந்துகொள்ளலாம். அதை நீங்கள் கடவுளின் அன்பின் சிறப்புப்பொருளாக படைக்கப்பட்டுள்ளீர்கள் (1யோவான்-3:2). கடவுள் உங்களை அன்புகூரவே படைத்துள்ளார். இந்த உண்மையின்மேல்தான் உங்கள் வாழ்க்கையை நீங்கள் கட்டவேண்டும்.

வேதம் சொல்லுகிறது: *கடவுள் அன்பாகவே இருக்கிறார் (1யோவான்-4:8).* கடவுள் அன்பு கொண்டவர் என்று சொல்லப்படவில்லை. அவரே *அன்புதான்*! கடவுளின் பண்பிலே அன்பே சாராம்சம். கடவுள் இப்போது முழுமையாய் பரிபூரணமாய் இருக்கிறார். ஆகவே, அவர் உங்களை உருவாக்கத் தேவையில்லை. அவர் தனிமையாய் இல்லை. அவர் உங்களை உருவாக்கியதின் நோக்கம் தனது அன்பை வெளிப்படுத்தவே. *கடவுள் சொல்லுகிறார். தாயின் வயிற்றில் தோன்றினதுமுதல் உங்களை ஏந்தி, தாயின் கர்ப்பத்தில் உற்பத்தியானது முதல் உங்களைத் தாங்கினேன். உங்கள் முதிர்வயது வரைக்கும் நான் அப்படி செய்துவந்தேன்; இனிமேலும் (நரைமயிராயிருக்கும் போதும்) நான் ஏந்துவேன், நான் சுமப்பேன், தப்புவிப்பேன் (ஏசாயா-46:3,4).*

கடவுள் என்று ஒருவர் இருந்திராவிட்டால், வாழும் நாம் ஒவ்வொருவரும் எதிர்பாராதவிதமாய், அண்டசராசரத்தில் ஏதோ நடந்து, அதன் விளைவின்படி வாழுகிறோம் என்பது பொருள். நீங்கள் அப்படி நினைத்தால், இந்த புத்தகத்தை வாசிக்காமல் நிறுத்திவிடுங்கள்! ஏனென்றால் உங்களுக்கு முக்கியத்துவமும் இல்லை, நோக்கமும் இல்லை. எது சரி, எது தவறு என்பதும் இல்லை, நன்மை தீமை இல்லை, இந்த உலகில் குறுகியகாலம் வாழுகிற உங்களுக்கு எதிர்கால நம்பிக்கையில்லை. அர்த்தம் இல்லாததாய் வாழ்க்கையிருக்கும். சாவுதான் முடிவாயிருக்கும்.

ஆனால் கடவுள் என்று ஒருவர் இருக்கிறார். உங்களை ஓர் நோக்கத்தோடே படைத்தார். உங்கள் வாழ்க்கைக்கு தெளிவான அர்த்தம் ஒன்று உண்டு! கடவுளோடு தொடர்புகொண்டு அவர்தான் என் வாழ்க்கை எல்லாவற்றிற்கும் காரணம் என்று கண்டுபிடிக்கும்போது வாழ்க்கை அர்த்தமும், நோக்கமும் கொண்டதாய் மாறுகிறது. *நம்மைப் பற்றி சரியாக புரிந்துகொள்ள ஒரே வழி கடவுளிடம் என் உறவு என்ன என்றும் நமக்காக என்ன செய்திருக்கிறார் என அறிவதுமே ஆகும்* (ரோமர்:12:13).

சிந்தனை சிறக்க: நீங்கள் இங்கு ஓர் எதிர்பாராத விபத்தாக இருக்கவில்லை.

கேள்விக்கணைகள் தொடுக்கலாமா?

- நீங்கள் உலகில் ஒரு சிறப்பான நோக்கத்திற்காக படைக்கப்பட்டிருக்கிறீர் என்பதை உங்கள் வாழ்வில் நடந்த நிகழ்ச்சி அல்லது அனுபவத்தின் வாயிலாக எப்போதேனும் தெரிந்திருக்கிறதா?
- கடவுளின் ஆழமான அன்பை உங்கள் வாழ்வில் எப்போதாவது உணர்ந்திருக்கிறீர்களா?
- கடவுள் என்மேல் அன்பாயிருக்கிறார், என் வாழ்க்கைக்கு நோக்கம் இருக்கிறது என்று நம்பி வாழும்போது, உங்கள் வாழ்க்கை எப்படி மாறுகிறது?

இந்த கேள்விகளுக்கு ஆழமான பதில் கண்டுபிடிக்க www.purposedrivenlife.com ஐ அணுகுங்கள்.

உங்கள் வாழ்க்கையை உந்துவது எது?

எல்லோருடைய வாழ்க்கையிலும் ஏதோ ஒன்று அவர்களை உந்துகிறது. பல அகராதிகள் "உந்துதல்" எனும் வினைச்சொல்லுக்கு, **வழிநடத்துதல், ஆக்கிரமித்தல்** அல்லது **திசைக்காட்டுதல்** என விளக்கம் கூறுகின்றன. ஓர் உந்துவண்டி, ஓர் ஆணி, ஓர் கோல்ஃப் பந்து, இவற்றை நீங்கள் வழிநடத்துகிறீர்கள், ஆக்கிரமிக்கிறீர்கள் அல்லது திசைகாட்டுகிறீர்கள். உங்கள் வாழ்க்கையின் உந்துசக்தி என்ன?

இப்போது நீங்கள் பிரச்சனையினாலோ அல்லது அழுத்தத்தினாலோ அல்லது கடைசி தருணத்தினாலோ உந்தப்படலாம். ஒருவேளை நீங்கள் வேதனையான நினைவால், அச்சுறுத்தும் பயத்தால், அல்லது நீங்கள் அறியாத விசுவாசத்தால் நடத்தப்படலாம். நூற்றுக்கணக்கான சூழ்நிலைகள், மதிப்புகள், உணர்ச்சிகள் உங்களது வாழ்க்கையை நடத்தலாம். இதோ அவற்றில் பொதுவாய் காணப்படுகிற ஐந்து காரியங்கள்:

பலர் குற்றவுணர்வினால் உந்தப்படுகின்றனர்: தங்கள் வாழ்க்கை முழுவதும் ஐயோ! தவறு செய்துவிட்டேனே என்று வருந்துவதால் தங்களது வெட்கத்தை மறைக்க முயற்சி எடுக்கின்றனர். குற்றவுணர்வுள்ள மக்கள் நினைவுகூருதலால் திரிக்கப்படுகின்றனர். அவர்கள் கடந்தகாலம் எதிர்காலத்தை ஆளும்படி விட்டுவிடுகின்றனர். அவர்கள் கவனமற்றநிலையில் தங்களது வெற்றியைக்கூட தாங்களே குத்தி அழித்து விடுகின்றனர். வேதத்திலே காயின் என்ற ஒருவன் தனது சகோதரனை கொன்றதினிமித்தமாக அவனது குற்றவுணர்வு கடவுளின் பிரசன்னத்திலிருந்து விலக்கிவிட்டது. அப்போது கடவுள் சொன்னார், *நீ பூமியில் நிலையற்று அலைகிறவனாயிருப்பாய். (ஆதியாகமம் 4:12).*

இது இப்போது உலகில் வாழும் பலரின் நிலைமையாகும் - நோக்கமில்லாமல் வாழ்க்கை முழுவதும் அலைகிறவர்கள்.

நமது கடந்தகாலத்தின் விளைவே நாம், அதற்காக அதில் நம்மை சிறைபடுத்திக்கொள்ளத் தேவையில்லை. நீங்கள் கடந்தகாலத்தால் பாதிக்கப்படுவது கடவுளுடைய நோக்கம் அல்ல. கொலைகார மோசேயை ஒரு கரிசனையுள்ள தலைவனாக்குகிறார் கடவுள். கோழையான கிதியோனை ஒரு தைரியமான தலைவனாக்குகிறார். உங்கள் வாழ்க்கையிலும் நம்பமுடியாத காரியங்களை உங்கள் மீதமுள்ள வாழ்க்கையில் கடவுள் செய்ய காத்திருக்கிறார். ஆண்டவர் வாழ்க்கையில் புதுத்துவக்கம் செய்வதில் மிகவும் திறமையானவர். வேதம் சொல்கிறது: *எவனுடைய குற்றமனப்பான்மை மன்னிக்கப்படுகிறதோ அவனுக்கு எவ்வளவு சந்தோஷம் கிடைக்கிறது... எவன் தனது பாவத்தை மறைக்காமல் அறிக்கை செய்து, மீறுதல்களை*

அறிக்கையிட்டு, கடவுள் அவையெல்லாவற்றையும் நீக்கிவிட்டால் என்ன ஆனந்தம் (சங்கீதம்-32:1,5).

பலர் வெறுப்பினால் உந்தப்படுகிறார்கள்:-

தங்களது கடந்தகாலக் காயங்களை பிடித்துக் கொண்டு, அதை விட்டுவிட முடியாமல் இருக்கின்றனர். மன்னிப்பினால் தங்களது வலியை விடுவிக்காமல், அதை மறுபடியும் மறுபடியும் நினைத்து வாழுகிறார்கள். சில கோபங்களால் பலர் தங்களை இறுக்கமாய் அடைத்துக்கொண்டு தங்களது உணர்ச்சிகளை தங்களுக்குள்ளே வைத்துக் கொள்ளுகின்றனர். மற்றவர்கள் கோபத்தால் பொங்கி *வெடிப்பார்கள்*, மற்றவர்களிடம் *சீறுவார்கள்*. இரண்டு விதங்களுமே தவறானவையே. அவை சுகவீனம், உதவியற்ற நிலையை உருவாக்கும். வெறுப்பு எப்போதுமே உங்களை வெறுப்பேற்றியவரை பாதிப்பதைவிட உங்களையே அதிகம் பாதிக்கிறது. உங்களைக் காயப்படுத்தியவர் அதை ஒருவேளை மறந்து, அவரது வாழ்க்கைச்சூழலில் உங்கள் நினைவே இல்லாமல் இருக்கலாம். ஆனால் நீங்களோ அதை அசைபோட்டுக்கொண்டேயிருக்கிறீர்கள். ஆகவே முடிவில்லாத வேதனையை அனுபவிப்பீர்கள்.

கவனியுங்கள்! கடந்தகாலத்தில் உங்களைக் காயப்படுத்தியவர்கள் தொடர்ந்து காயப்படுத்த முடியாது. அப்படி காயப்படுத்த வேண்டுமெனில் உங்களது வெறுப்பின் பிடிவாதமே காரணம்.

கடந்தகாலம் கடந்துவிட்டது! அதை எதுவும் மாற்றமுடியாது. நீங்கள்தான் உங்களையே கசப்பினால் கிழித்துக்கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்காகவே அதிலிருந்து கற்றுக் கொள்ளுங்கள், கடந்துசெல்லுங்கள். கடவுளின் வசனம் கூறுகிறது. *நீங்களே கவலைப்பட்டால் சாவு வரும், வெறுப்பு உன்னை முட்டாளாய் மாற்றி, அர்த்தமில்லா செயலை செய்யவைக்கும் (யோபு-5:2).*

பலர் பயத்தால் உந்தபடுகிறார்கள்:

வேதனையுள்ள அனுபவங்களின் விளைவே பயம் ஆகும். நன்றாக கட்டுப்பாட்டிலுள்ள வீடுகளில் உண்மைக்கு மாறான எதிர்பார்ப்புகள், அல்லது பாரம்பரியம் அவர்களை தன்வயப்படுத்துகிறது. வழிநடத்துவது எதுவாக இருந்தாலும், பயத்தினால் மேற்கொள்ளப்பட்ட மக்கள் பல சிறந்த தருணங்களை இழந்துபோகிறார்கள். ஏனென்றால் அவர்கள் பழகியவற்றிலிருந்து வெளியே வர பயப்படுகிறார்கள். பத்திரமாக, எந்தவித ஆபத்தும் இல்லாமல் தங்களுக்கு தாங்களே ஒரு மதிப்பான வாழ்க்கையை அமைத்துக் கொள்கின்றனர்.

பயம் என்பது நீங்களே ஏற்படுத்திக்கொண்ட சிறைச்சாலை ஆகும். அது கடவுள் உங்களுக்காக வைத்திருக்கும் திட்டத்திலிருந்து உங்களை தடுத்து விடுகிறது. பயத்தை முறியடிக்க ஒரே வழி, ஆவிக்குரிய ஆயுதங்களாகிய விசுவாசம், அன்பு இவற்றைக்கொண்டு அதை எதிர்க்க வேண்டும்.

வேதம் சொல்லுகிறது: *பூரண அன்பு பயத்தை புறம்பே தள்ளும். பயம் முடக்கிவிடும், ஆதலால் பயத்தின் வாழ்க்கை அதாவது மரணபயம், நியாயத்தீர்ப்பின் பயம் போன்ற பயங்கள் ஒருவருக்கு இருக்குமாயின் அவர் அன்பினால் நிரப்பப்பட்டவர் அல்ல. (1யோவான்4:18).*

பலர் பணத்தாசையால் உந்தப்படுகின்றனர்:

அவர்களது முழுவாழ்க்கையுமே ***பெற்றுக் கொள்ளும் ஆசை*** நிரம்பியதாய் காணப்படுகிறது. அவர்கள் அப்படி விரட்டப்படுவதின் காரணம் என்னவென்றால் அதிகப்பணம் இருந்தால், அதிக சந்தோஷம், அதிக முக்கியத்துவம், அதிக பாதுகாப்பு என்னும் தவறான விசுவாச அடிப்படையாகும். இந்த மூன்று யோசனையுமே தவறானதாகும். பற்றிக்கொள்ளுவது எப்போதுமே தற்காலிக சந்தோஷத்தைத்தான் தரும். பொருள்கள் மாற்றம் பெறாது. அது உங்களுக்கு சோர்வையேத் தரும், அப்போது புதிய, பெரிய, இன்னும் நல்ல பொருளை எதிர்பார்ப்பீர்கள்.

நீங்கள் அதிகம் பெற்றால் அதிக முக்கியத்துவம் பெற்றவன் என்பது தவறான கொள்கையாகும். **சுயமதிப்பும், முழுமதிப்பும் வேறுபட்டவையாகும்.** நீங்கள் வைத்திருக்கும் பொருட்களாலே உங்களது மதிப்பு வரவில்லை. கடவுள் சொல்கிறார், வாழ்க்கையில் மதிப்பு வாய்ந்தது **பொருள்** அல்ல என்று.

பணத்தைப் பற்றிய பொதுவான தவறான கொள்கை என்னவென்றால், நான் அதிகப்பணம் வைத்திருந்தால் நான் இன்னும் பாதுகாப்பாய் இருக்கிறேன் என்பதே. அப்படி அல்ல! செல்வம், நம்மால் கட்டுப்படுத்த முடியாத சில காரணங்களால் திடீரென்று நம்மை விட்டுச்சென்றுவிடும். உண்மையான பாதுகாப்பு உன்னை எப்போதும் விட்டுவிடாததாய் காணப்பட வேண்டும். அது கடவுளோடுள்ள உறவில் கிடைக்கிறது.

அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தினாலே உந்தப்படுபவர்கள் உள்ளனர். பெற்றோர்களாலும், வாழ்க்கைத்துணையாலும், பிள்ளைகளாலும், ஆசிரியர்களாலும், நண்பர்களாலும் கிடைக்கும் நன்மதிப்பை எதிர்பார்த்து அதை வைத்தே வாழ்க்கை நடத்துகின்றனர். திருப்தி செய்யமுடியாத பெற்றோர்களை திருப்தி செய்ய முயற்சிக்கும் நிறைய பெரியவர்கள் உண்டு. தங்களைப்போன்ற மக்கள் தங்களைப் பாராட்ட வேண்டும் என்று நினைத்து கவலைப்படுகிறவர்கள் உண்டு. இயல்பாக, கூட்டத்தின்பின் செல்லுகிறவர்கள் துரதிர்ஷடவசமாக கூட்டத்திலேயே தொலைந்துவிடுவார்கள். எனக்கு வெற்றியின் சாவிகள் (இரகசியங்கள்) எல்லாம் தெரியாது. ஆனால் தோல்வியின் ஒரு சாவி என்னவென்றால் மற்றவர்களுடைய அங்கீகாரத்தை நாடி வாழ்தல் ஆகும். மற்றவர்களுடைய சிந்தனை உன்னை ஆட்சி செய்யுமென்றால் கடவுள் வைத்திருக்கும் பெரிதான நோக்கத்தை இழந்துவிட

நிச்சயமாய் வழி உங்களுக்கு கிடைத்துவிட்டது என்றே பொருளாகும். இயேசு சொன்னார்: *இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய உங்கள் ஒருவராலும் முடியாது. (மத்தேயு 6:24).*

இன்னும் பல சக்திகள் உன்னுடைய வாழ்க்கையை உந்தி தள்ளலாம். எல்லாம் அதே சாவின் முடிவாகத்தான் இருக்கும். பயன்படுத்தாத திறமைகள், வேண்டாத அழுத்தங்கள், திருப்தியில்லாத வாழ்க்கை தான் பலனாய் அமையும்.

கடவுளின் நோக்கத்தை நிறைவேற்ற துணிந்து விட்டால் எதுவுமே முக்கியமில்லாததாய் மாறி விடுகிறது. வெற்றி, சொத்து, புகழ், சந்தோஷம் எதுவுமே இதற்கு இணையாகாது. நோக்கமில்லாத ஓட்டம், திசையில்லா செயல், காரணமில்லா நடவடிக்கைகள் என்றாகிவிடும். நோக்கமில்லாவிடில் வாழ்க்கை சின்னத்தனமாக, முக்கியமற்றதாக, தேவையில்லாததாக மாறிவிடும்.

இந்த சிறிய புத்தகம் நீங்கள் படைக்கப்பட்ட ஐந்து நோக்கத்தை அறிமுகப்படுத்துவதாக அமையும். முதலாவதாக நோக்கம் உந்தும் வாழ்க்கை வாழ்வதினால் நடைமுறையில் கிடைக்கும் நன்மைகளைப் பார்ப்போம்.

உங்களது வாழ்க்கையின் நோக்கத்தை அறிந்துகொண்டால், வாழ்க்கைக்கு அர்த்தம் கிடைக்கிறது. நாம் அர்த்தத்திற்காகவே படைக்கப் பட்டிருக்கிறோம். ஆகவேதான் மக்கள் உண்மையைப்

போல காணப்படுகின்ற ஜோதிடம் மற்றும் இயற்கைக்கு அப்பாற்பட்ட வாழ்க்கையின் எதிர்காலத்தை குறிசொல்பவர்களிடம் அதைக் கண்டுபிடிக்க செல்கின்றனர். வாழ்க்கையில் அர்த்தமிருக்கும்போது நீங்கள் எதையும் தாங்கிக்கொள்ளுவீர்கள், அர்த்தமில்லாவிடில் எதையும் தாங்கிக் கொள்ள முடியாது.

கடவுள் இல்லாவிடில் வாழ்க்கையில் நோக்கமே இல்லை. நோக்கம் இல்லாவிடில் வாழ்க்கையில் அர்த்தம் இல்லை. அர்த்தம் இல்லாவிடில் வாழ்க்கையில் முக்கியத்துவம் அல்லது நம்பிக்கை இல்லை. வேதத்தில் பலதரப்பட்ட மக்கள் நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கிறார்கள். ஏசாயா புகார் செய்கிறார். அதற்கு *நான்: விருதாவாய் உழைக்கிறேன், வீணும் வியர்த்தமுமாய் என் பெலனை செலவழிக்கிறேன்; ஆகிலும் என் நியாயம் கர்த்தரிடத்திலும், என் பலன் என் தேவனிடத்திலும் இருக்கிறது என்று சொன்னேன் (ஏசாயா 49:4).* யோபு சொல்லுகிறார்: *என் நாட்கள் நெய்கிறவன் எறிகிற நாடாவிலும் தீவிரமாய் ஓடுகிறது: அவை நம்பிக்கையில்லாமல் முடிந்துபோகும் (யோபு:7:6). இப்படியிருக்கிறதை அரோசிக்கிறேன்; எந்நாளும் உயிரோடிருக்க விரும்பேன், என்னை விட்டுவிடும்; என் நாட்கள் மாயைத்தானே (யோபு 7:16).* மிகவும் பெரிய துக்கம் சாவு அல்ல, நோக்கமில்லாத வாழ்வே ஆகும்.

ஓர் இளைஞன் தனது இருபதாம் வயதிலே - நான் தோற்றவனாக உணருகிறேன். நான் ஏதாவதாக ஆக வேண்டும் என திணறுகிறேன். ஆனால் எனக்கு அது என்னதென்றே தெரியவில்லை. எப்படி செய்ய வேண்டும் என்று மட்டுமே எனக்குத் தெரியும். ஒருநாள் என் வாழ்க்கையின் நோக்கத்தை தெரிந்து கொள்வேனானால், அப்போதுதான் நான் வாழத் தொடங்குவேன் என்று நம்புகிறேன் என்றான்.

உங்கள் வாழ்க்கைக்கு காற்றும், தண்ணீரும் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியமானது நம்பிக்கையாகும். உங்கள் வாழ்க்கையை சமாளிக்க நம்பிக்கை மிகமுக்கியமானது. அறிவர் பெர்னி சிகல் (Dr.Bernie Siegel) தனது புற்றுநோயாளிகளைப் பார்த்து நீங்கள் நூறாண்டுகள் வாழவிரும்புகிறீர்களா? என்று கேட்பதன்மூலம் எந்த நோயாளி குணமாவார் என்று கூறிவிடுவார். தங்கள் வாழ்க்கையில் ஆழமான நோக்கம் கொண்டவர்கள் ஆம் என்றார்கள், அவர்களில் பலர் உயிர்தப்பினர். நம்பிக்கை என்பது ஓர் நோக்கத்தில் இருந்துதான் வருகிறது.

உங்களுக்கு நம்பிக்கையற்றவராக இதுவரை இருந்திருந்தால், பொறுங்கள்! ஆச்சரியமான மாற்றங்கள் உங்களது வாழ்க்கையில் நிகழப்போகிறது. நீங்கள் ஓர் நோக்கத்தோடுள்ள வாழ்க்கையை தொடங்கப் போகிறீர்கள். கடவுள் சொல்லுகிறார்: *நீங்கள் எதிர் பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள் பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன்*

என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவை தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே (எரே 29:11). நீங்கள் நினைக்கலாம் ஒரு மாற்றமுடியாத சூழ்நிலையில் இருக்கிறேனே என்று. ஆனால் வேதம் சொல்கிறது. *நாம் வேண்டிகொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே, நமக்கு செய்ய வல்லவராகிய அவருக்கு... சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக (எபேசியர் 3:20).*

உங்களது நோக்கத்தை நீங்கள் அறிந்தால் வாழ்க்கை சுலபமாகிவிடுகிறது. அது நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்றும் எதைச் செய்யாதிருக்க வேண்டும் என்றும் விளக்கம் தருகிறது. எது முக்கியமானது, எது முக்கியமில்லாதது என்று வரையறுக்கும் தூக்குநூலாய் வாழ்க்கையின் நோக்கம் அமைகிறது. நீங்கள் சுருக்கமாய் கேட்கும் கேள்வி என்னவென்றால், இந்த செயல் என் வாழ்க்கையின் நோக்கத்தை நிறைவேற்றுமா? என்பதே.

நோக்கம் தெளிவாக இல்லாவிடில் உங்களது தீர்மானங்கள், நேரத்தை நிர்ணயிப்பது, உங்கள் சொத்துக்களை பயன்படுத்துவது போன்ற காரியங்கள் அடிப்படையில்லாமல் போய்விடும். நீங்கள் சாதாரணமாக சூழ்நிலை, அழுத்தங்கள், அந்த நேரத்தில் உங்கள் மனநிலை போன்றவற்றை வைத்து முடிவுசெய்கிறீர்கள். தங்களது நோக்கத்தை தெரியாதவர்கள் அதிகமாய் முயற்சிப்பார்கள். அவை

அவர்களுக்கு அழுத்தத்தை, களைப்பை மற்றும் பிரிவுகளை உண்டு பண்ணும்.

மக்கள் விரும்பும் அனைத்தையும் உங்களால் செய்யவே முடியாது. கடவுளின் சித்தத்தை செய்ய மட்டுமே **உங்களுக்கு போதியநேரம்** இருக்கிறது. நீங்கள் எல்லாவற்றை செய்துமுடிக்க முடியவில்லை என்றால், கடவுள் உங்களைப்பற்றி விரும்பினதைவிட அதிகமாய் செயலாற்றுகிறீர்கள், அல்லது ஏதோவொரு விதத்தில் உங்களது நேரத்தை வீணாக்குகிறீர்கள். நோக்கத்தால் உந்தப்படும் வாழ்க்கையானது சாதாரண வாழ்க்கை வாழவும், புத்தியுள்ள கால அட்டவணை உடையதாகவும் காணப்படும். வேதம் சொல்கிறது: *ஒன்றுமில்லாதிருக்கத் தன்னை செல்வனாகப் பாராட்டுகிறவனும் உண்டு; மிகுந்த செல்வமிருக்கத் தன்னை தரித்திரனாகப் பாராட்டுகிறவனும் உண்டு (நீதிமொழிகள் 13:7).*

சாதாரண, எளிமையான வாழ்க்கையே நிறைவான வாழ்க்கையாகும். அதுவொரு நிம்மதியான வாழ்வுக்குள்ளாய் வழிநடத்தும். *உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனை பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர் (ஏசாயா 26:3).*

உங்களது நோக்கம் தெரிந்தால் வாழ்வில் தெளிவு இருக்கும். முக்கியமானதிலே மட்டும் உங்கள் முயற்சியை ஒருமுகப்படுத்துவீர்கள், அதிலே செயல்படுவீர்கள். நீங்கள் தேர்வுசெய்வதினாலே உங்கள் செயல் வீரியம் உள்ளதாய் இருக்கும்.

சிறிய விஷயங்களினாலே திசைமாறுவது மனித சுபாவம் ஆகும். சின்னத்தனமான முயற்சிகளை வாழ்க்கையில் நிறைவேற்றுகிறோம். ஹென்றி டேவிட் தொரெயு என்பவர் மக்கள் வாழ்க்கையை *மிகுந்த ஏக்கத்தோடு* பார்க்கிறார். ஆனால் இன்றைய வாழ்க்கைக்கு பொருந்துமாறு கூறினால் "நோக்கமில்லாமல் திசைகெட்டு அலைதல்" என விளக்கலாம். பலர் ஒரு மின்விசிறியைப்போல வேகமாய், துரிதமாய் சுழலுகின்றனர், ஆனால் அவர்கள் எங்கும் செல்லுவதே இல்லை.

நோக்கம் தெளிவாக இல்லாதபடியால் திசைமாறிக் கொண்டேயிருக்கும் வேலைகள், உறவுகள், சபைகள் மற்றும் பல வெளிப்படையானவை மாறிக்கொண்டே இருக்கும். இக்குழப்பத்தை இந்த மாற்றம் சரி செய்துவிடும் அல்லது என் மனதின் வெற்றிடம் நிரப்பப்படும் என்றும் நம்புகிறீர்கள். *இந்த முறை இந்த திருப்பம் மாறுபட்டிருக்கும்* என நினைக்கிறீர்கள். ஆனால் உண்மையான பிரச்சனையை அது தீர்க்கவில்லை, ஏன்? தெளிவு இல்லை, நோக்கமில்லை. வேதம் சொல்லுகிறது: *கருத்தில்லாமல் வாழாதிருங்கள், சிந்திக்காமல் செயல்படாதிருங்கள். உங்கள் ராஜாதி ராஜா எதை விரும்புவார் என்பதை புரிந்து கொள்ளுங்கள் (எபேசியர்:5:17).*

தெளிவாக்கும் வல்லமை வெளிச்சத்தில் காணப்படும். தெளிவில்லாத வெளிச்சம் குறைந்த வல்லமை அல்லது குறைந்த சக்தியை வெளிப்படுத்தும். ஆனால் அதன் சக்தியை ஒருமுகப்படுத்த வேண்டும்.

ஒரு பூதக்கண்ணாடியில் சூரியவெளிச்சத்தை ஒருமுகப்படுத்தினால் ஒரு புல்லையோ அல்லது ஓர் காகிதத்தையோ எரியவைக்கலாம். ஒளியை ஒருமுகப்படுத்தி ஒரு கதிர்வீச்சைப் போலாக்கினால் இரும்பையே வெட்டிவிடலாம்.

ஒருமுகப்படுத்தப்பட்ட வாழ்க்கையைப்போன்ற வல்லமையான வாழ்க்கை ஏதுமில்லை. இவ்வுலகில் மிகப்பெரிய மாற்றத்தை உண்டுபண்ணி, வரலாறு படைத்த ஆண்களும், பெண்களும் தங்களை ஒருமுகப்படுத்தினவர்களே ஆவர். வேதத்தில் காணப்படும் வல்லமையான தலைவர்களில் ஒருவரான பவுல் சொன்னார்: *சகோதரரே, அதைப் பிடித்துக் கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை, ஒன்று செய்கிறேன், பின்னானவற்றை மறந்து, முன்னானவற்றை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தய பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்* (பிலிப்பியர் 3:13,14). உங்கள் வாழ்க்கையில் இதை நீங்கள் செய்ததுண்டா?

உங்கள் வாழ்க்கை பாதிப்பை ஏற்படுத்த வேண்டுமெனில் *ஒருமுகப்படுத்துங்கள்.* ஏனோதானோவென்று செய்வதை நிறுத்துங்கள். எல்லாவற்றையும் செய்ய முயற்சிப்பதை நிறுத்துங்கள். குறைவாக செயல்படுங்கள். நல்ல காரியங்களில்கூட அவசியமில்லாதது வெட்டப்பட வேண்டும், மிக முக்கியமானதை மட்டும் செயல்படுத்த வேண்டும். பலனையும், செயலையும் ஒருபோதும் குழப்பிக்

கொள்ளாதீர்கள். நோக்கமில்லாமலே நீங்கள் சுறுசுறுப்பாய் காணப்பட முடியும். அப்படியானால் பலன் என்ன? *கடவுள் வைத்திருக்கும் அனைத்தையும் அனுபவிக்க விரும்புகிறவர்கள், இலக்கை ஒருமுகப் படுத்துவார்கள்* (பிலிப்பியர் 3:15).

நோக்கத்தை அறிந்துகொள்ளுவது உங்களை பெலப்படுத்தும். நோக்கம் ஒரு மோகத்தை உண்டாக்கும். தெளிவான நோக்கத்தை போல் ஊக்கப்படுத்த வேறெதுவும் இல்லை. நோக்கம் இல்லாவிட்டால் மோகம் மறைந்துவிடும். நோக்கம் இல்லாதவருக்கு படுக்கையிலிருந்து எழும்புவதே ஒரு பெரிய வேலையாய் தோன்றும். சாதாரணமாக அர்த்தமில்லாத வேலை, அதிகவேலையைப்பற்றி நான் கூறவில்லை, அது ஒருவரை களைப்படைய வைக்கும், பெலத்தை உறிஞ்சிவிடும், மகிழ்ச்சியை திருடிவிடும்.

ஜார்ஜ் பெர்னாட் ஷா (George Bernardshaw) எழுதுகிறார். "நீங்கள் ஒரு நோக்கத்தை புரிந்து கொண்டு அதை மிகப்பெரியதாய் கருதினால் அதுவே உண்மையான வாழ்க்கையின் சந்தோஷம், சுகமில்லாமல், சுயத்தினாலும் நோயினாலும் பாதிக்கப்படுவதாலும், உலகம் உங்களை சந்தோஷப் படுத்தாமல் இருக்கிறது என்று குறைகூறுவதை விட்டுவிட்டு இயற்கையின் சீற்றமாய் மாறுவீர்கள்".

நோக்கத்தை அறிந்துகொள்ளுவது நிரந்தரத்திற்கு உங்களை ஆயத்தப்படுத்தும்.

இவ்வுலகத்தால் மறக்க முடியாத புகழ் பெற வேண்டுமென்று தங்கள் வாழ்க்கையையே அர்ப்பணித்து முயற்சி செய்கின்றனர். தாங்கள் மறைந்த பின்பும் தாங்கள் நினைவுகூரப்பட வேண்டும் என விரும்புகின்றனர். ஆனாலும் முடிவில் சித்தி பெறுவது மக்கள் உன்னைப் பற்றி என்ன கூறுகிறார்கள் என்பதல்ல, உன்னைப் பற்றி கடவுள் என்ன சொல்லுகிறார் என்பதே. எல்லா சாதனைகளும் போகப்போக மிஞ்சப்பட்டுப்போகும், முந்தைய சாதனைகள் முறிக்கப்படும். புகழ் மறையும், வாழ்த்துக்கள் மறக்கப்படும் என்பதை மக்கள் இன்னும் உணராதிருக்கிறார்கள். ஒருமுறை நான் ஒரு கல்லூரி மாணவனைப் பற்றி கேள்விப்பட்டேன். அவன் பள்ளியில் பயிலும்போது அவனது ஒரே நோக்கம் டென்னிஸ் விளையாட்டில் சாதனையாளனாக வரவேண்டும் என்பதே! அவனுக்கு கிடைத்த வெற்றிச் சின்னம் (Trophy) அவனது பள்ளியில் முக்கியமான இடத்தில் வைக்கப்பட்டிருந்தது. சில ஆண்டுகள் கழித்து, யாரோவொருவர் அந்த வெற்றிச்சின்னத்தை வெற்றிபெற்றவருக்கு அஞ்சல் செய்திருந்தார். அந்த பள்ளியை மறுபடி எடுத்துக் கட்டும்போது அதை குப்பைத்தொட்டியிலிருந்து எடுத்ததாக கூறினார் அவர். அந்த மனிதர் கூறினார்: **“போதியநேரம் கொடுத்தால் உனது எல்லா வெற்றிச் சின்னங்களும் வேறுசிலரால் குப்பைத் தொட்டிக்கு வந்துவிடும்” என்று. அவர் கூற்று உண்மையே.**

இவ்வுலகில் புகழ் பெற வேண்டும் என்று நினைப்பது கிட்டப்பார்வையுள்ள நோக்கமாகும். ஞானமாய் நேரத்தை செலவழிப்பவர் *நித்தியமான* புகழ்ச்சிக்காய் வாழ்க்கையை கட்டுவார். இந்த உலகில் நினைவுகூரப்படுவதற்காக நீங்கள் படைக்கப் படவில்லை. **இவ்வுலகில் நீங்கள் இருப்பது நிரந்தரத்திற்கு உங்களைத் தயார்செய்வதற்கே!**

நீங்கள் நிரந்தரத்திற்குள் செல்வதற்குமுன்பாக ஒருநாள் கடவுளுக்கு முன்பாக நிற்கவேண்டும். அன்று அவர் உங்களது கணக்கை சீர்தூக்கிப் பார்ப்பார், வாழ்க்கையின் இறுதித்தேர்வு நடைபெறும். வேதம் சொல்லுகிறது: *நாமெல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போமே... ஆதலால் நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக்குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான்* (ரோமர் 14:10,12). அதிர்ஷ்டவசமாக இத்தேர்வில் நாம் தேர்வுபெற, முன்னதாகவே கேள்வியைக் கொடுத்துவிட்டார். கடவுள் இரண்டு தவிர்க்கமுடியாத கேள்விகளை கேட்பார் என்பதை நாம் வேதத்திலிருந்து யூகித்துக் கொள்ளலாம்.

முதலாவதாக: **“என்னுடைய குமாரன் இயேசு கிறிஸ்துவை வைத்து நீ என்ன செய்தாய்?”** அவர் உங்கள் மதப்பின்னனியையோ, உங்களது கொள்கைப் பார்வையையோ பற்றி கேட்கவில்லை. ஆனால், ஒரு முக்கியமான காரியம் என்னவென்றால், இயேசு கிறிஸ்து உனக்காக செய்ததை ஏற்றுக் கொண்டு அவர்மீது அன்பும், நம்பிக்கையும்

வைத்தாயா? இயேசு கூறினார்: *நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலேயன்றி ஒருவனும் பிதாவினிடத்தில் வரான். (யோவான் 14:6).* கடவுள் தன்னுடைய குமாரன் இயேசுவை எல்லோரும் அறிய வேண்டும், அன்புகூர வேண்டும்; நம்ப வேண்டும் என விரும்புகிறார். ஏனெனில், அவரை உலகத்திற்கு அனுப்பி கடவுள் எப்படிப்பட்டவர் என்றும், மன்னிப்பு என்னவென்றும், இரட்சிப்பு என்ன என்றும் விளக்கினபடியால் இயேசுவில் அன்புகூர விரும்புகிறார்.

இரண்டாவதாக: "உங்கள் வாழ்க்கையை வைத்து நீங்கள் என்ன செய்கிறீர்கள்?" கடவுள் கொடுத்த வரங்கள், திறமைகள், வாய்ப்புகள், வல்லமைகள், உறவுகள், சொத்துக்களை வைத்து என்ன செய்கிறீர்கள். அவற்றை வைத்து உங்களையே திருப்தி செய்தீர்களா? அல்லது கடவுள் உங்கள் வாழ்க்கையில் கொடுத்த நோக்கத்தை நிறைவேற்ற பயன்படுத்தினீர்களா?

இந்த இரண்டு கேள்விக்கும் உங்களை பதிலளிக்க வைப்பதே, இச்சிறு புத்தகத்தின் நோக்கமாகும். முதல் கேள்வி உங்கள் நிரந்தர காலத்தை எங்கே கழிக்கப்போகிறீர்கள் என்பதை தீர்மானிக்கும். கடவுளுடனா அல்லது கடவுளைப் பிரிந்தா? இரண்டாவது கேள்வி, நிரந்தரமான காலத்தில் என்ன செய்யப்போகிறாய் என்பதைக் குறிக்கும். உங்களது பொறுப்பும், உங்களது பலனும் மோட்சத்தில் உள்ளது. இந்த சிறுபுத்தகத்தை முடிக்குமுன் இந்த

இரண்டு கேள்விகளுக்கும் பதில்கொடுக்கும் வகையில் நீங்கள் மாறுவீர்கள்.

சிந்தனை சிறக்க: உங்கள் வாழ்க்கையை உந்துவது எது?

கேள்விக்கணைகள் தொடுக்கலாமா?

- உங்கள் குடும்பத்தாரையும், உங்கள் நண்பர்களையும் பார்த்து உங்கள் வாழ்க்கையை உந்துவது அல்லது உங்கள் வாழ்க்கையை உந்தும் அல்லது உற்சாகப்படுத்தும் காரியம் எது என்று கேட்டால் அவர்களது பதில் எதுவாயிருக்கும்?
- பல மக்கள் ஏன் தங்களது வாழ்க்கையில் வாழ்க்கையின் நோக்கத்தால் உந்தப்படாமலிருக்கிறார்கள் என நீங்கள் நினைக்கிறீர்கள்?
- நீங்கள் கடவுளுக்காக வாழ்க்கையைத் துவங்கி சந்தோஷத்தில் மூழ்குவதை எந்த பழக்கம், காயம், சோம்பேறித்தனம் தடை செய்கிறது?

இந்த கேள்விகளுக்கு ஆழமான பதில் கண்டுபிடிக்க **www.purposedrivenlife.com** ஐ அணுகுங்கள்.

நீங்கள் எப்போதும் வாழும்படி படைக்கப்பட்டீர்கள்!

இங்கே இருப்பது மட்டும் வாழ்க்கையல்ல.

முழுமையான உற்பத்திக்கு முன்பாக ஆடை அலங்காரத்துடன்கூடிய இறுதி ஒத்திகையே இவ்வுலகில் நாம் வாழும் வாழ்க்கையாகும். வாழ்வதைவிட சாவிற்குபிறகு *நிரந்தரமாக* வாழ்வது மிகமிக நீண்டவாழ்வாகும். உலகமானது நாடக மேடை, பாலர்கல்வி, நித்தியவாழ்வின் பயிற்சிமேடை என கூறலாம். உண்மையான விளையாட்டிற்கு முன்பான பயிற்சி, உடலை சூடுபடுத்தி தயார்செய்து ஓட்டத்தில் ஓடுவதற்கான தொடக்கம். **ஆம்! இந்த வாழ்க்கையானது அடுத்த வாழ்க்கைக்கான ஆயத்தமே.**

அதிகமாய் வாழ்ந்தால் நூறு ஆண்டுகள் இந்த உலகில் வாழலாம், ஆனால் எப்போதும் நிரந்தரமாக இருக்கப்போகிறோம். சர். தாமஸ் பிரௌனி (Sir Thomas Browne) சொல்லுகிறார்; "இவ்வுலகில் உங்கள் வாழ்க்கையானது, நித்தியவாழ்வின் ஒரு சிறுவிளக்கமே ஆகும்". நீங்கள் எப்போதும் வாழவே படைக்கப்பட்டவர்கள்.

வேதம் சொல்லுகிறது: "*நித்தியத்தையும் அவர்கள் உள்ளத்திலே வைத்திருக்கிறார்*" (பிரசங்கி 3:11). உங்களுக்குள் பிறப்பிலிருந்து இயற்கையாகவே நிரந்தர காலத்திற்கான தாகம் வைக்கப்பட்டிருக்கிறது.

ஏனெனில் கடவுள் உன்னை வனைந்து, தனது சாயலாக நிரந்தர காலத்திற்காகப் படைத்தார். எல்லோரும் நாம் அறிந்தபடி ஒரு நாளிலே இறந்தாலும், சாவானது எப்போதும் இயற்கைக்கு அப்பாற்பட்டதாகவும், நியாயமற்றதாகவும் தோன்றவே செய்கிறது. கடவுள் நமது மூளையில் அப்படிப்பட்ட இணைப்பை கொடுத்திருப்பதால் நாம் எப்போதும் வாழ வேண்டும் என ஆசைப்படுகிறோம்.

ஒருநாள் உங்கள் இதயத்துடிப்பு நின்றுவிடும். அப்போது உங்கள் உடலுக்கும், இந்த உலகில் வாழும் நேரத்திற்கும் முடிவுகட்டப்படுகிறது, ஆனாலும் அது உங்களது முடிவல்ல. உலகத்தில் நமக்கு கிடைத்திருக்கும் உடல் "ஒரு கூடாரம்" என்றும் ஆனால் எதிர்காலத்தில் கிடைக்கப்போகும் உடல் "ஒரு வீடு" என வேதம் அழைக்கிறது. வேதம் சொல்கிறது: "*நாம் வாழும் கூடாரமாகிய உலகப்பிரகாரமான சரீரம் கிழித்தெரியப்படும்போது, கடவுள் நமக்கு ஓர் வீட்டை நமக்கென்று ஆயத்தம் பண்ணியிருக்கிறார். அதை அவரே நித்தியமாய் வாழும்படி படைத்திருக்கிறார்.* (2கொரிந்தியர் 5:1).

பூமிக்குரிய வாழ்க்கை பல வாய்ப்புகளை நமக்குக் கொடுத்தாலும், நிரந்தரம் நமக்கு இரண்டு வாய்ப்புகளையேக் கொடுக்கிறது: மோட்சம் அல்லது நரகம். **இயேசுவோடு இவ்வுலகத்திலுள்ள உறவு, நிரந்தர காலத்தில் உங்களது உறவை தீர்மானிக்கும்.** கடவுளின் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவில் அன்புகூர்ந்து அவரில் நம்பிக்கை

கொண்டிருந்தவர்கள் மட்டும் நிரந்தர காலமாய் அவரோடு நித்தியத்தில் வாழ அழைக்கப்படுவார்கள். ஆனால் அவரது அன்பு, மன்னிப்பு மற்றும் இரட்சிப்பை தள்ளிவிட்டவர்கள் நிரந்தர காலம் மொத்தமும் கடவுள் இல்லாமல் வாழுவார்கள்.

அறிவாற்றல் பெற்ற ஆக்ஸ்போர்ட் பேராசிரியரும், புத்தக ஆசிரியருமான சி.எஸ். லூயிஸ் (C.S.Lewis) சொன்னார். "இருவகையான மக்களுண்டு: ஆண்டவரே உம் சித்தம் செய்யப்படுவதாக என்று கடவுளிடம் கூறுகிறார்கள், அவர்களிடம் கடவுள் கூறுகிறார், சரி, உனது வழியே நடக்கட்டும். இதில் வருந்தத்தக்க காரியம் என்னவெனில், பலர் கடவுள் இல்லாத நித்தியத்தை கழிக்க வேண்டும், ஏனென்றால் கடவுள் இல்லாத வாழ்க்கையை உலகத்தில் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள்.

இங்கே, இப்போது நீங்கள் வாழ்வது மட்டும் வாழ்க்கையல்ல, வாழ்வில் இன்னும் பல காரியம் உண்டு என்பதை முழுவதுமாய்ப் புரிந்து கொண்டு இவ்வாழ்க்கை நிரந்தரகால வாழ்விற்கு நம்மை ஆயத்தப்படுத்துகிறது என்பதை உணர்ந்துவிட்டால், உங்கள் அன்றாட வாழ்க்கை மாறத்தொடங்கிவிடும். நீங்கள் நித்திய **வெளிச்சத்தின் வாழ்க்கை** வாழத் தொடங்கிவிடுவீர்கள். அது உங்கள் உறவு, வேலை, எல்லா சூழ்நிலைகள் எல்லாவற்றையும் பாதிக்கத் தொடங்கும். திடீரென முக்கியமாய்த் தோன்றின பல செயல்கள், இலக்குகள், ஏன்? பிரச்சனைகள்கூட ஒன்றும் இல்லாததாய், சின்னத்தனமாய்,

மதிப்பற்றதாக உங்களுக்கே தோன்றும். நீங்கள் கடவுளிடம் நெருங்க நெருங்க எல்லாமே சிறியதாய் தோன்றத் தொடங்கும்.

நித்தியத்தின் வெளிச்சத்தில் வாழும்போது, உங்கள் மதிப்பீடுகள் மாறிவிடும். உங்கள் நேரத்தையும், பணத்தையும் மிகவும் ஞானமாய் கையாளுவீர்கள். புகழ், சொத்து மற்றும் வெற்றி மற்றும் கேளிக்கையில் செலவுசெய்வதைவிட உறவுகளிலும், குணத்திலும் அதிக முதலீடு செய்வீர்கள். உங்கள் வாழ்க்கையில் பிரதானமானவை திரும்ப ஒழுங்குபடுத்தப்படும். இவ்வுலகம் போகும் திசை, ஆடம்பரம், புகழப்படுகிற மதிப்பீடுகளை ஒரு பொருட்டாய் எண்ணமாட்டீர்கள். பரிசுத்த பவுல் கூறுகிறார்: *ஆகிலும், எனக்கு இலாபமாய் இருந்தவைகளெவையோ அவற்றை கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன். அது மாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன்* (பிலி. 3:7,8).

இந்த உலகத்தில் நீங்கள் செலவிடப்போகும் நேரம்தான் உங்களது முழுவாழ்க்கை என நீங்கள் நினைப்பீர்களென்றால் நான் உங்களுக்கு கொடுக்கும் அறிவுரை உடனடியாக வாழத்தொடங்குங்கள். நீங்கள் நல்லவராக, நல்ல மதிப்பீடுகளைக் கொண்டவராக, தீயவை செய்யாததால் எந்தத் தவறான விளைவும் சந்திக்க நேரிடாது என்பதாய் இருந்தாலும் அந்த வாழ்க்கையை மறந்துவிடுங்கள். உங்களது செயல்

கெடுதியான விளைவை உண்டாக்காமல் முழுவதும் சுயத்தை மையமாகக் கொண்ட வாழ்க்கை நடத்தலாம். ஆனால் சாவு என்பது உங்கள் வாழ்வின் முடிவல்ல *என்பது ஒரு பெரிய மாற்றத்தை உங்களில் கொண்டு வரக்கூடும்.* சாவு உங்கள் வாழ்க்கையின் முடிவு அல்ல, அது நித்தியத்திற்கான ஒரு மாற்றமே ஆகும். ஆகவே, உலகத்தில் நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்திற்கும் *வெளிப்படையான* விளைவை சந்திக்கும் நேரமிது. நீங்கள் செய்யும் ஒவ்வொரு செயலும் நிரந்தர காலத்திலே நீங்கள் மீட்டும் இசையாய் அமையும்.

இப்போதைய வாழ்வின் மிக ஆபத்தான காரியம் என்னவெனில், குறுகிய காலத்திற்காய் யோசிப்பதாகும். உங்கள் வாழ்வில் பெரிய காரியத்தை அனுபவிக்க உங்களுக்கு நித்தியத்தைக் குறித்த தரிசனம் தொடர்ந்து உங்கள் மனதிலும், அதன் மதிப்பீடு உங்கள் இதயத்திலும் இருக்கவேண்டும். இப்போது, இங்கே என்பதைவிட மிகதூரமானது வாழ்க்கை! மிதக்கும் பனிக்கட்டியின் மேல்மட்டத்தை இன்று பார்க்கிறீர்கள். நித்தியம் என்பது நீருக்கடியில் மறைந்துள்ள, நீங்கள் பார்க்காத பனிக்கட்டியாகும்.

நிரந்தரத்தில் எனது குணாதிசயங்கள் எவையெல்லாம் கடவுளின் குணாதிசயத்தோடு ஒத்திருக்கும். உண்மையாய் சொல்லப்போனால் எனது மூளையின் திறன் மோட்சத்தில் நான் பார்த்து கையாளப்போகும் அதிசயங்களையும் மகிமையையும்

தாங்க இயலாததாய்க் காணப்படும். அது ஒரு எறும்பிடத்தில் போய் இணையதளம் (Internet)ஐ பற்றி விளக்குவது போன்றதாகும். அது முட்டாள்தனமானது. நிரந்தர வாழ்க்கையை சரியாய் விளக்க சரியான வார்த்தைகள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. வேதம் சொல்லுகிறது : *தேவன் தம்மில் அன்பு கூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவற்றைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவை மனுஷனுடைய இதயத்தில் தோன்றவுமில்லை. (1கொரிந்தியர் 2:9).*

எப்படியோ, கடவுள் நிரந்தரவாழ்வைப் பற்றி நொடிப்பொழுது பார்வையைத் தமது வசனத்தின்மூலம் காண்பித்திருக்கிறார். இப்போது நமக்குத் தெரிவது என்னவெனில், கடவுள் நமக்கு ஒரு நித்தியவீட்டை ஆயத்தம் பண்ணுகிறார். விசுவாசிகளாகிய நமக்கு அன்பாயிருந்தவர்கள் வலி, வேதனையிலிருந்து விடுவிக்கப்பட்டு உலகில் உண்மையாயிருந்ததின் பலனை அடைந்து, அவர்கள் மகிழுகின்ற வேலையை மறுபடியுமாய் பெற்று பரத்தில் வாழுகிற அவர்களுடன் நாம் மறுபடி இணைக்கப்படுவோம். நாம் மேகத்தில் தலையின் மேல் வட்டமான மகிமையின் ஒளியோடு வீணை வாசிக்கிறவர் களாய் *காணப்படமாட்டோம்* ஆனால் நாம் கடவுளோடு உடைபடாத உறவைப் பெற்றுக் கொள்ளுவோம், அவரும் நம்மில் நித்திய முடிவில்லாத, அளவிடப்படாத அன்பில் மகிழ்ந்திருப்பார். ஒருநாள் இயேசு சொல்வார், *அப்பொழுது, ராஜா தமது வலதுபக்கத்தில்*

நிற்பவர்களைப் பார்த்து ; வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தை சுதந்தரித்துக்கொள்ளுங்கள்! (மத்தேயு25:34).

சி.எஸ்.லூயிஸ் (C.S.Lewis) நித்தியத்தைப் பற்றி நார்னியாவின் நாளாகமத்தில் (Narnia) என்ற தமது பிள்ளைகளுக்கான ஏழு கதைவரிசையில் கூறுகிறார். நம்மைப் பொருத்தமட்டில் நிரந்தரமான வாழ்ந்தனர் என்பது எல்லாக் கதைகளின் முடிவாகும். ஆனால் அவர்களுக்கு அது *உண்மைக்* கதையின் ஆரம்பம். உலகத்திலுள்ள எல்லோருடைய வாழ்க்கையும், உறை மற்றும் தலைப்பு அடங்கிய அட்டையாய் இருக்கிறது. இறுதியாக இப்போதுதான் பெரிய கதைகளில் ஒன்றின் அத்தியாயத்தை ஆரம்பித்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட கதையை பூவுலகில் யாரும் படித்திருக்க முடியாது. அந்த கதை நிரந்தரமாய் சென்று கொண்டேயிருக்கும். வருகிற ஒவ்வொரு அத்தியாயமும் முந்தின அத்தியாயத்தைவிட சிறப்பானதாக அமையும். C.S.Lewis, The Last Battle (New York : Collier Books, 1970 page 184 *ல் இருந்து கையாளப்பட்டது.*

கடவுள் ஒரு நோக்கத்தை இந்த வாழ்வில் வைத்திருக்கிறார், அதன் முடிவு இங்கேயில்லை. அவரது திட்டம் இந்த உலகத்தில் நான் வாழும் சில ஆண்டுகளுக்கும் மிகமிக அதிகமானது. அது வாழ்நாளில் காணும் வாய்ப்புகளைவிட மிகச் சிறந்தது.

உங்கள் வாழ்வின் காலங்களைத் தாண்டி கடவுள் உங்களுக்கு வாய்ப்பு கொடுக்கிறார். வேதம் சொல்லுகிறது: *கர்த்தருடைய ஆலோசனை நித்திய காலமாகவும், அவருடைய இதயத்தின் நினைவுகள் தலைமுறை தலைமுறையாகவும் நிற்கும் (சங்கீதம்33:11).*

அடக்கச் சடங்கில் மட்டுமே பலர் நித்தியத்தைக் குறித்து யோசித்தாலும், அது ஆழமற்றதாய், உணர்ச்சியற்றதாய், அறியாமை நிறைந்ததாய் தோன்றுகிறது. *சாவை நினைப்பதே பயங்கரம் என நினைக்கின்றனர் பலர், ஆனால் சாவே இல்லை என்று நிச்சயமாய் நடக்கப்போவதை வெறுப்பதும் சுகமின்மை ஆகும் (பிரசங்கி 7:2).* நடக்கப்போவதை அறிந்தும் அதற்குத் தயாராக இல்லாதவன் முட்டாள் எனப்படுவான். நீங்கள் நிரந்தரவாழ்வைப் பற்றி குறைவாக அல்ல **நிறைவாகவே** சிந்திக்க வேண்டும்.

ஒன்பது மாதம் தாயின் வயிற்றில் செலவழித்த காலமே ஒரு முடிவுக்கானது அல்ல. ஆனால் இவ்வுலக வாழ்க்கைக்கு தயாராகுவதே ஆகும், அதேபோல இவ்வுலக வாழ்க்கை நிரந்தரவாழ்விற்கு நம்மை தயார் செய்வதாகும். இயேசுவோடு உங்களுக்கு உறவு இருக்குமானால் நீங்கள் சாவைக்குறித்து பயப்பட தேவையில்லை. அது நிரந்தரவாழ்விற்குச் செல்ல திறக்கும் கதவே தவிர, வாழ்க்கையின் முடிவு அல்ல. சாவின் நேரமே உலகவாழ்வின் கடைசி மணித்துளிகள் ஆகுமே தவிர, உங்களது கடைசி நேரமல்ல, அது நிரந்தரகாலத்தில் பிறக்கும் நாள்.

வேதம் சொல்லுகிறது: *நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை; வரப்போகிறதையே நாடித் தேடுகிறோம் (எபிரெயர் 13:14).*

நிரந்தரகாலத்தை வைத்து இவ்வுலக வாழ்க்கையைக் கணக்கிட்டால் அது ஓர் இமைப்பொழுது ஆகும். ஆனால் அதன் விளைவோ நிரந்தர காலம், இவ்வாழ்வில் செய்யும் செயல்கள், நித்தியத்தில் உங்கள் முடிவாகும். இந்த தேகத்தில் குடியிருக்கையில் கர்த்தரிடத்தில் குடியிராதவர்களாய் இருக்கிறோமென்று அறிந்தும், எப்போதும் தைரியமாயிருக்கிறோம் (2கொரிந்தியர் 5:7).

பல்லாண்டுகளுக்கு முன்னதாக ஒரு வாக்கியம் பலரை உற்சாகப்படுத்தியது. "இன்றைய வாழ்க்கை இனிமேலுள்ள வாழ்வின் முதல்நாள்". உண்மையில் ஞானமாய் வாழுகிறவர்களுக்கு இன்றைய நாள் என்பது நான் வாழ்ந்த வாழ்க்கையின் கடைசிநாள் என்பதே. ஒவ்வொரு நாளும் எனது கடைசிநாளை நான் நினைத்து நிச்சயமாய் ஒரு வியாபாரியைப் போல ஒரே நோக்கத்தோடு வாழ வேண்டும்.

சிந்தனை சிறக்க:

இங்கே (இவ்வுலகில்) காணாதது, பரலோக வாழ்வில் காண முடியும்.

- கடவுள் நம்மை நிரந்தரவாழ்க்கைக்காக படைத்தது ஏன் என நீங்கள் நினைக்கிறீர்கள்?
- ஏன் நிலைக்காத காரியங்களுக்காக அதிகம் கவலைப்பட்டு, நிரந்தர காலத்திற்கு தயாராவதில் குறைந்த நேரமே செலவுசெய்கிறோம்?
- நிரந்தரவாழ்விற்காக தயார்படுத்துவதில் இப்போது என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்?

இந்த கேள்விகளுக்கு ஆழமான பதில் கண்டுபிடிக்க www.purposedrivenlife.com ஐ அணுகுங்கள்.

கடவுளின் பார்வையில் நம் வாழ்க்கை!

நீங்கள் உங்கள் வாழ்க்கையை எப்படி *பார்க்கிறீர்களோ* அதையே *வடிவமைக்கிறீர்கள்!* நீங்கள் வாழ்க்கைக்கு என்ன விளக்கம் கொடுக்கிறீர்களோ அதுதான் உங்கள் முடிவாகும். (நீங்கள் வாழ்க்கையை நோக்கும் விதமானது உங்கள் முதலீட்டு நேரம், நீங்கள் செலவழிக்கும் பணம், நீங்கள் பயன்படுத்தும் திறமைகள், உங்கள் உறவுகளின் மதிப்பீடுகள் முதலியவற்றை பாதிக்கும்).

மற்றவர்களை நன்றாக புரிந்துகொள்ள நீங்கள் கேட்கவேண்டிய கேள்வி: *உங்கள் வாழ்க்கையை எப்படிப் பார்க்கிறீர்கள்?* உலகில் எத்தனை மக்கள் இருக்கிறார்களோ, அத்தனை விதமான பதில் கிடைக்கும். இதோ எனக்கு கிடைத்த பதில்களில் சில; வாழ்க்கை என்பது ஒரு சர்க்கஸ், ஒரு சுரங்கம், ஒரு உல்லாசச்சக்கரம், ஒரு புதிர், ஒரு இசை, ஒரு பயணம், ஒரு நடனம்! மக்கள் சொல்லியிருக்கிறார்கள்: அது ஒரு இராட்சத ராட்டிணம் போன்றது அல்லது பத்து வேகம் (கியர்) கொண்ட ஒரு மிதிவண்டியை (10speed bycycle)ஐ போன்றது, அதிலுள்ள கியரை நாம் பயன்படுத்துவதே கிடையாது அல்லது வாழ்க்கை ஒரு சீட்டுவிளையாட்டு போன்றது. நமது கையில் உள்ளவற்றை வைத்துதான் விளையாட முடியும்.

நீங்கள் வாழ்க்கையைப் பற்றி என்ன படம் வைத்திருத்திருக்கிறீர்கள்? நீங்கள் என்ன

சொல்லுகிறீர்களோ அதுதான் உங்கள் *வாழ்க்கையின் உருவகம்.* அது உங்கள் வாழ்க்கையின் விளக்கமாகவும், வாழ்க்கை எப்படி நடக்கிறதென்றும், என்ன எதிர்பார்க்கிறீர்கள் என்றும் தெரிவிக்கிறது. மக்கள் தங்களது வாழ்க்கையின் உருவகத்தை, அவர்கள் அணிகிற ஆடையிலும், நகையிலும், வைத்திருக்கும் வாகனத்தில் ஒட்டும் படங்களின் மூலமாகவும், உடம்பில் பச்சை குத்துவதின் மூலமாகவும் தெரியப் பண்ணுகிறார்கள்.

வாழ்க்கையில் பேச்சில்லாத உருவகங்கள் நீங்கள் நினைப்பதைவிட உங்கள் சுயநினைவாகவோ, சுயநினைவற்றோ, நீங்கள் பிடித்துள்ள உங்கள் வாழ்க்கையை குறித்து உங்கள் மனதில் ஒரு படம் வைத்துள்ளீர்கள். வாழ்க்கையை அதிகமாய் பாதிக்கும். அது உங்களது எதிர்பார்ப்புகளையும், மதிப்பீடுகளையும், உறவுகளையும், இலக்குகளையும், முக்கியமானவற்றையும் தீர்மானிக்கும். உங்கள் வாழ்க்கையை, விருந்தாக (Party) நினைத்தால், உங்களது பிரதான வாழ்வின் மதிப்பு *கேளிக்கை ஆகும்.* உங்களது வாழ்க்கையை ஓர் ஓட்டமாக நினைத்தால் உங்கள் மதிப்பீடு *வேகம்*, நீங்கள் அவசரமாக வேலைசெய்பவராய் பலநேரத்தில் காணப்படுவீர்கள். உங்களது வாழ்க்கையை மிக நீண்ட ஓட்டப்பந்தயமாய் எண்ணினீர்கள் என்றால் *பொறுமை* உங்கள் மதிப்பீடு ஆகும். உங்கள் வாழ்க்கையை போர்க்களமாக அல்லது விளையாட்டு

போட்டியாக உருவகம் செய்தால் *வெல்லுவது* உங்களுக்கு முக்கியமானதாய் தோன்றும், உங்களது வாழ்க்கையின் பார்வை என்ன?

தவறான உருவகத்தை வாழ்க்கையின் அடிப்படை நோக்கமாய் வைத்து வாழ்ந்தால் என்ன நடக்கும் என்று சீர்தூக்கிப் பார்த்ததுண்டா? தவறான உருவகத்தை உங்களது பெற்றோர்களிடமிருந்தோ, உங்கள் நண்பர்களிடமிருந்தோ, சினிமாவிலிருந்தோ, படிக்கும் பத்திரிக்கைகளிலிருந்தோ, தவறக்கூடிய பல வழிமுறைகள் மூலமாய் நீங்கள் பெற்றிருக்கலாம். ஆனால் கடவுளின் நோக்கத்தை நிறைவேற்ற உலகப் பிரகாரமான ஞானத்தை சவாலிட்டு கடவுள் நினைக்கிற வாழ்க்கை உருவகங்களை பயன்படுத்த வேண்டும். வேதம் சொல்லுகிறது: *நீங்கள் இந்த பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள் (ரோமர் 12:2).*

வேதம், மூன்று விதமான வாழ்க்கை உருவகங்களை நமக்கு கடவுளின் பார்வையாக கற்றுத்தருகிறது. வாழ்க்கை ஒரு ***தேர்வு,*** வாழ்க்கை ஒரு ***நம்பிக்கை***, வாழ்க்கை ஒரு ***தற்காலிகமான பயிற்சி***. இந்த உருவகங்களே நோக்கம் உந்தும் வாழ்க்கையின் அஸ்திபாரமாய் அமைகின்றன. மேலேயுள்ள முதல் இரு உருவகங்களை இந்த அத்தியாயத்திலும் மற்ற உருவகத்தை அடுத்த

அத்தியாயத்திலும் பார்ப்போம்.

உலகில் வாழும் வாழ்க்கை ஒரு தேர்வு. வாழ்க்கை உருவகங்கள் பல நிகழ்வுகளின் மூலமாய் வேதம் முழுவதிலும் காணகிடக்கின்றன. கடவுள் தொடர்ந்து மக்களின் குணாதிசயங்களை, நம்பிக்கையை, கீழ்ப்படிதலை, அன்பை, உண்மையை, விசுவாசமாயிருப்பதை சோதிக்கிறார். சோதனை, பரிசோதனை, புடமிடுதல், பரீட்சித்தல் போன்ற வார்த்தைகள் வேதத்தில் இருநூறுக்கும் அதிகமான இடத்தில் காணப்படுகின்றன. கடவுள் ஆபிரகாமை சோதித்து, அவரது ஒரே மகனாகிய ஈசாக்கை பலியிடும்படி சொன்னார். கடவுள் யாக்கோபை ஏழு ஆண்டுகளாக ராகேலுக்காக உழைத்து, மனைவியாய் பெற்றுக்கொள்ள யாக்கோபை சோதித்தார்.

ஏதேன் தோட்டத்தில் ஆதாமும், ஏவாளும் தேர்வில் தோற்றுப்போயினர். தாவீது ராஜா கடவுளின் தேர்வுகளில் பலமுறை தவறினவன். வேதம் தனிப்பட்ட தேர்வுகளில் வென்றவர்களையும் பட்டியல் இட்டுள்ளது. குணத்தில் சிறந்தவர்களான யோசேப்பு, ரூத், எஸ்தர் மற்றும் தானியேல்.

குணாதிசயமானது வளர்க்கப்படுவதும், வெளியாக்கப்படுவதும் தேர்வுகளினாலேயே. *வாழ்க்கையே* ஒரு தேர்வுதான். **நீங்கள் *எப்போதுமே* சோதிக்கப்படுகிறீர்கள்!** மக்கள் மத்தியில், பிரச்சனைகளில்... வெற்றியில், பிரிவுகளில்,

சுகவீனங்களில், சோர்வின் நேரங்களில், ஏன்? தட்ப வெப்ப சூழ்நிலையிலும் கடவுள் நம்மை கவனித்துக் கொண்டேயிருக்கிறார். மற்றவர்களுக்கு கதவை திறந்து வரவேற்பது மற்றும் குப்பையை எடுப்பது, நம்மிடம் வேலைசெய்பவரிடம். எடுபிடிகளிடம் அன்பாய் நடப்பதைக்கூட அவர் கவனிக்கிறார்.

கடவுள் கொடுக்கும் எல்லா தேர்வும் நமக்குத் தெரியாது. ஆனால் சிலவற்றை நாம் வெளிப்படுத்த முடியும். வேதத்தின் அடிப்படையில் வாக்குத்தத்தம் நிறைவேற தாமதிக்கும்போது, தீர்க்கமுடியாத பிரச்சனைகள், கேட்கப்படாத ஜெபங்கள், ஏற்றுக் கொள்ளமுடியாத குற்றப்படுத்துதல், அர்த்தப்படுத்த முடியாத துக்கங்கள் போன்ற பெரிய மாற்றங்கள் மூலம் கடவுள் உங்களை சோதிக்கலாம். என்னுடைய சொந்தவாழ்விலும் கடவுள் என்னை சோதித்ததை நான் பார்த்திருக்கிறேன். எனது *விசுவாசத்தை* பிரச்சனை மூலமாகவும், பொருள்களை கையாளுவதில் எனது *நம்பிக்கையையும்*, மக்களின் மூலமாக எனது அன்பையும் சோதித்திருக்கிறார்.

மிகமுக்கியமான தேர்வு என்னவென்றால் வாழ்க்கையில் கடவுள் பிரசன்னத்தை உணர முடியாத நேரத்தில் என்ன செய்கிறீர்கள் என கடவுள் எதிர்பார்க்கிறார். சில சமயங்களில் வேண்டுமென்றே தன்னை மறைத்துக்கொள்கிறார். அப்போது அவர் அருகில் இருப்பதே தெரியாது. எசேக்கியா ராஜா இந்த சோதனை வழியாய்ச் சென்றவராவார். வேதம் சொல்லுகிறது: *...அவன் இதயத்தில் உண்டான எல்லாவற்றையும் அறியும்படி அவனை சோதிக்கிறதற்காக தேவன் அவனை கைவிட்டார். (2நாளா32:31)* எசேக்கியா ராஜா கடவுளோடு நெருங்கிய உறவு கொண்டவன், அவனது வாழ்வின் உச்சகட்டமான நேரத்தில் கடவுள் அவனை தனியே விட்டு விட்டு அவனது குணத்தை சோதித்தார். அவனது பலவீனத்தை வெளிப்படுத்த, இன்னும் அவனுக்கு பொறுப்பை கொடுக்கவே அப்படிச் செய்தார்.

வாழ்க்கை ஓர் பரீட்சை என்பதை புரிந்து கொண்டால், *(ஒரு காரியமும்)* வாழ்க்கையில் சிறியது, முக்கியமற்றது என்றே கிடையாது. ஓர் மிகச் சிறிய காரியம்கூட நம்முடைய குணம் வளருவதற்கு பெரிய தருணமாய் அமைகிறது. ஒவ்வொரு நாளும் முக்கியமானவை, ஒவ்வொரு நொடியும், உங்களது குணத்தின் ஆழத்தை ஆராய ஓர் வாய்ப்பு, உங்களது அன்பை வளர்க்கவும், கடவுளை சார்ந்து கொள்ள உங்களுக்குக் கிடைத்த வாய்ப்பு. சில தேர்வுகள் அதிர்ச்சிக்கு உள்ளாக்குகிறவையாகவும் காணப்படும். ஆனால் எல்லாமே நித்தியத்தோடு தொடர்புள்ளவையே.

நல்ல செய்தி என்னவென்றால் எல்லாப் பரீட்சையிலும் கடவுள் நீங்கள் வெற்றிபெறுவதையே விரும்புகிறார். ஆகவே அவர் உங்களுக்கு கொடுக்கும் சோதனை கிருபையைக் காட்டிலும் சிறியதாகவே இருக்க அனுமதியளிக்கிறார். எனவே அவற்றை உங்களால் கையாள முடியும். வேதம் சொல்லுகிறது:

மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுவதற்கு அவர் இடங்கொடாமல் சோதனையோடு கூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார். (1கொரிந்தியர் 10:13).

ஒவ்வொரு முறை நீங்கள் சோதனையில் வெற்றி பெறும்போது, கடவுள் பார்த்து உங்களுக்கு திட்டம் வகுத்து, பரலோகத்தில் அதன் பலன் கிடைக்கச் செய்கிறார். வேதம் சொல்லுகிறது: *சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குதத்தம் பண்ணின ஜீவகிரீடத்தை பெறுவான். (யாக்கோபு 1:12).*

உலகவாழ்க்கை ஒரு நம்பிக்கை.

வேதத்தில் காணும் வாழ்க்கையின் இரண்டாவது உருவகம் இதுவே. நமது நேரம், வலிமை, அறிவு, வாய்ப்புகள், உறவுகள், சொத்துக்கள் எல்லாமே நாம் ஆளும்படியாகவும், கவனிக்கும்படியாகவும் கடவுள் நமக்கு பரிசாக கொடுத்தார். கடவுள் என்னவெல்லாம் கொடுத்தாரோ, அவற்றிற்கு நாம் பொறுப்பாளிகள் அல்லது ஆளுபவர்கள். நாம் பொறுப்பாளிகள் என்ற கருத்து, கடவுள்தான் எல்லாருக்கும் எல்லாவற்றிற்கும் சொந்தக்காரர் என்று நாம் புரிந்துகொள்ளும்போது

வருகிறது. *வேதம் சொல்கிறது: பூமியும், அதின் நிறைவும் கர்த்தருடையது (சங்கீதம் 24:1).*

உண்மையாகவே இந்த உலகில் வாழும் குறுகிய காலத்தில் எதுவும் எனக்கு *சொந்தமல்ல.* நாம் உலகில் இருக்கும்போது கடவுள் அதை நமக்குக் கடனாய் தந்திருக்கிறார். நீங்கள் பிறப்பதற்கு முன்பாக அது கடவுளுக்கு சொந்தமாயிருந்தது, நீங்கள் இறந்த பின் அதை வேறோருவருக்கு கடனாய்க் கொடுப்பார். அதை சில காலம் மட்டும் உங்களாலே அனுபவிக்க முடியும்.

கடவுள் ஆதாமையும், ஏவாளையும் படைத்து தான் படைத்த உலகத்தையும், அதன் சொத்து அனைத்தையும் கவனிக்கும்படியாக முழுவதுமாய் நம்பி பொறுப்பாளர்களாக வைத்தார். வேதம் சொல்கிறது: *பின்பு தேவன் அவர்களை நோக்கி: அதை கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டு கொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார் (ஆதியாகமம் 1:28).*

கடவுள் மனிதனுக்குக் கொடுத்த முதல் பணி என்னவென்றால் அவரது சரக்கை இவ்வுலக முழுவதும் பரப்பி ஆண்டுகொள்ளும்படிச் செய்தார். இந்தக் காரியத்தை கடவுள் இன்னும் மாற்றவில்லை. நமது நோக்கத்தில் இதுவும் ஒரு பங்கு ஆகும். நாம் அனுபவிக்கும் எல்லாமே,அவர் என்னை நம்பி எனது

கரங்களில் கொடுத்ததாகும். வேதம் சொல்லுகிறது: *கடவுள் கொடுக்காமல், உனக்கு சொந்தமானது எது? கடவுள் தான் உனக்கு எல்லாவற்றையும் கொடுத்திருக்க, ஏன் நீயே அதை சம்பாதித்ததாக மேன்மை பாராட்டுகிறாய்? (1கொரிந்தியர் 4:7).*

சில ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு தம்பதியர் என்னையும், எனது மனைவியையும் ஹவாயிலுள்ள கடற்கரையை நோக்கி அமைந்திருந்த அழகான வீட்டை எங்களது விடுமுறை நாட்களை மகிழ்ச்சியாக கழிக்கக் கொடுத்தார்கள். எங்களாலே அவ்வளவு செலவுசெய்து அனுபவித்திருக்க முடியாது. மிகப்பெரிய மகிழ்ச்சியை அனுபவித்தோம். அவர்கள் அதைக் கொடுக்கும்போது, இதை உங்களுடையதாகவே நினைத்து அனுபவியுங்கள் என்றார்கள். நாங்களும் அப்படியே செய்தோம். அங்கிருந்த குளத்திலே நீந்தினோம், குளிர்சாதனப் பெட்டியில் இருந்த உணவை உண்டோம், குளியலறையில் இருந்த துண்டை பயன்படுத்தினோம், தட்டுமுட்டுக்களை பயன்படுத்தினோம், சந்தோஷமாக படுக்கைகளில் ஏறிக்குதித்தோம். அதையெல்லாம் செய்தாலும் எங்களுக்கு நன்றாகத் தெரியும். *உண்மையிலே* அது எங்களுடையது அல்ல என்பதினாலே எல்லாவற்றையும் சிறப்புகவனத்துடன் செய்தோம். அதை அனுபவித்தோமே தவிர ஆக்கிரமிக்கவில்லை.

நமது மனிதசுபாவம் சொல்லும் "எனக்கு அது சொந்தம் இல்லாவிட்டால், நான் ஏன் அதில் கரிசனைக் கொள்ள வேண்டும்?" ஆனால் ஆண்டவர் நம்மிடத்தில் உயர்ந்ததரத்தை எதிர்பார்க்கிறார், ஏனென்றால் கடவுளுக்கு சொந்தமானதால் அது மிக்க கரிசனையோடு, என்னால் முடிந்த அளவில் பார்த்துக் கொள்ள வேண்டும். வேதம் சொல்லுகிறது: *விலையுயர்ந்த பொருளை நம்பிக் கொடுக்கும்போது, பெற்றுக்கொண்டவர், உண்மையுள்ளவனென்று காணப்படுவது அவனுக்கு அவசியமாம் (1கொரி 4:2).*

இயேசு கிறிஸ்து வாழ்க்கையை நம்பிக்கையோடு ஒப்பிட்டு பேசியதை அவர் சொன்ன உவமைகள் மூலம் கடவுளிடம் நாம் பொறுப்புள்ளவர்களாய் இருக்க வேண்டும் என அடிக்கடி அடையாளம் காட்டியுள்ளார். தாலந்து உவமையில் - *மத்தேயு 25:14 - 29*ல் ஓர் எஜமான் தமது சொத்தை தனது வேலைக்காரரை நம்பி கொடுத்து சென்றான். அந்த எஜமான் திரும்ப வந்த போது ஒவ்வொரு வேலைக்காரனுக்கு கொடுத்த பொறுப்பை நிறுத்துப் பார்த்து அதற்கு ஏற்றாற்போல பலன் கொடுக்கிறான். எஜமான் சொல்லுகிறார். *நல்லது, உத்தமும், உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாய் இருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்; உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றார் (மத்தேயு 25:21).*

கடவுள் உன்னை நம்பிக்கொடுத்ததை உங்களது இவ்வுலக வாழ்க்கையின் முடிவிலே உங்களை சீர்தூக்கிப் பார்த்து அதற்கு ஈடான பலனைத் தருவார். **அப்படி என்றால் நீங்கள் செய்யும் ஒவ்வொரு**

காரியமும் (சாதாரண காரியம்கூட), ஏன் நீங்கள் செய்யும் அன்றாட வீட்டுவேலைகள்கூட பரலோகத்தோடு தொடர்புள்ளதாகும். கடவுள் உங்கள் கரங்களில் கொடுத்தவை எல்லாமே *நம்பிக்கை* அடிப்படையில், என்ற எண்ணத்துடன் செயல்பட்டால், கடவுள் நித்தியத்தில் மூன்று பலன்களைக் கொடுக்கப்போகிறார். முதலாவது, நீங்கள் கடவுளின் **நிச்சயத்தை** பெற்றுக் கொள்ளுவீர்கள்: அவர் சொல்லுவார், நல்ல வேலை. நன்றாய் செய்தாய். அடுத்தது, நீங்கள் கடவுளினால் கிடைக்கும் **உயர்வை** பெற்று இன்னும் பெரிய பொறுப்பை நித்தியத்தில் பெற்றுக் கொள்ளுவீர்கள்: *அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாய் வைப்பேன்.* அதன்பின் ***கொண்டாட்டத்தின்*** மூலம் உங்களை மகிமைப்படுத்துவார். *உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி.*

பலர் பணத்தை *பரீட்சைக்காகவும், நம்பிக்கைக்காகவும்* கடவுள் நம்மிடத்தில் கொடுத்திருக்கிறார் என்ற உணர்வு இல்லாமல் இருக்கிறார்கள். கடவுள் பணத்தை வைத்து அவரை நம்பவும், இன்னும் பலருக்கு மிகப்பெரிய பரீட்சையாகவும் அமையும்படியாய் பயன்படுத்துகிறார். கடவுள், நாம் பணத்தை எப்படி செலவு பண்ணுகிறோம் என்பதை வைத்து நாம் எவ்வளவு நம்பிக்கைக்கு பாத்திரவான்கள் என பரிசோதிக்கிறார். இயேசு சொன்னார், *அநீதியான உலகப் பொருளைப் பற்றி*

நீங்கள் உண்மையாயிராவிட்டால், யார் உங்களை நம்பி உங்களிடத்தில் பரலோகின் மெய்யான பொருளை ஒப்புவிப்பார்கள்? (லூக்கா 16:11).

இந்த முக்கியமான ஆவிக்குரிய சத்தியத்தை பல மக்கள் முற்றிலும் அறியாதவர்களாயிருக்கிறார்கள். நான் உலகில் என் பணத்தை எப்படி செலவழிக்கிறேன் என்பதும், எனது ஆவிக்குரிய வாழ்க்கையின் தரமும் நேரடியான தொடர்புடையது என கடவுள் சொல்லுகிறார். எப்படி எனது பணத்தை ஆட்சி செய்கிறேன் (உலக ஆஸ்தி) என்பதைக் கொண்டே கடவுள் எவ்வளவு தூரம் என்னை ஆவிக்குரிய ஆசீர்வாதங்களால் ஆசீர்வதிக்க முடியும் (உண்மையான ஐசுவரியம்) என்பதை நிர்ணயிக்கிறார். நான் உங்களிடம் ஓர் கேள்வி கேட்கலாமா? நீங்கள் பணத்தை கையாளும் முறை கடவுள் உங்கள் வாழ்வில் செய்ய ஆசைப்படுவதை தடை செய்கிறதா? கடவுள் உன்னை ஆவிக்குரிய ஆசீர்வாதத்தால் நிரப்புவதற்கு உன்னை நம்புவாரா?

இயேசு சொல்கிறார்; *எவனிடத்தில் அதிகம் கொடுக்கப்படுகிறதோ அவனிடத்தில் அதிகம் கேட்கப்படும்; மனுஷர் எவனிடத்தில் அதிகமாய் ஒப்புவிக்கிறார்களோ அவனிடத்தில் அதிகமாய் கேட்பார்கள் (லூக்கா 12:48).* வாழ்க்கை என்பது பரீட்சையும், நம்பிக்கையும் மற்றும் கடவுள் எவ்வளவு அதிகமாய் கொடுக்கிறாரோ, அவ்வளவுக்கு அதிகமான பொறுப்பை நம்மிடத்திலிருந்து எதிர்பார்க்கிறது ஆகும்.

சிந்தனை சிறக்க: வாழ்க்கை என்பது பரீட்சையும், நம்பிக்கையுமாகும்.

கேள்விக்கணைகள் தொடுக்கலாமா?

- இது வரைக்கும் உங்கள் வாழ்வின் உருவகம் என்ன? உங்கள் வாழ்க்கையை எப்படி விளக்கினீர்கள்?
- கடந்தகால அனுபவங்களை வைத்து, கடவுள் உங்களை எப்படி பரிசோதித்திருக்கிறார் என்று இப்போது சொல்ல முடியுமா?
- எல்லாம் கடவுளுடையது, எனக்கு அவர் கடனாய் கொடுத்திருக்கிறார் என்ற உண்மையின்படி வாழ்ந்தால், உங்களது சொத்தைக் குறித்து என்ன மாற்றம் வரும்?

இந்த கேள்விகளுக்கு ஆழமான பதில் கண்டுபிடிக்க **www.purposedrivenlife.com** ஐ அணுகுங்கள்.

வாழ்க்கை என்பது தற்காலிகமான பயிற்சி

இவ்வுலக வாழ்க்கை ஓர் தற்காலிக பயிற்சி.

இவ்வுலக வாழ்க்கை குறுகியது, தற்காலிகமானது, இயற்கையாய் மாறக்கூடியது என்று அநேக உருவகங்களாலே வேதத்தில் விளக்கப்பட்டிருக்கிறது. அது ஒரு *பனியைப்* போன்றது, *வேகமாய் ஓடுகிறவனைப்* போன்றது, *சுவாசத்தைப்* போன்றது, காணாமல் போகும் *புகையைப்* போன்றது என்று விளக்கப்பட்டிருக்கிறது. வேதம் சொல்லுகிறது : *பூமியின் மேல் நம்முடைய நாட்கள் நிழலைப் போலிருக்கிறது. (யோபு : 8:9).*

நம்முடைய வாழ்வை சிறந்த முறையில் பயன்படுத்த இரண்டு உண்மைகளை நம் மனதை விட்டு அகற்றவே கூடாது: முதலாவது, நித்தியத்தோடு ஒப்பிடும்போது உலக வாழ்க்கை மிக மிக குறைந்தது. இரண்டாவது, உலகம் தற்காலிகமாய் தங்கும் இடமே, ஆகவே அதோடு ஒட்டிவிட வேண்டாம். ஆண்டவரே! இவ்வுலக வாழ்க்கையை நீர் பார்க்கும் விதமாய்ப் பார்க்க உதவி செய்யும் என்று கேளுங்கள். தாவீது ஜெபிக்கிறார். *கர்த்தாவே, நான் எவ்வளவாய் நிலையற்றவன் என்று உணரும்படி என் முடிவையும், என் நாட்களின் அளவு இவ்வளவு என்பதையும் எனக்குத் தெரிவியும் (சங். 39:4).*

மறுபடி, மறுபடி கர்த்தரின் வார்த்தை நமது பூவுலக

வாழ்வை பரதேசியான வாழ்க்கை என்றே அழைக்கிறது. இது உங்களது நிரந்தர வீடு அல்ல, முடிவான இடமும் அல்ல. நீங்கள் உலகத்தின் பார்வையாளராக இதன் வழியாகக் கடந்து செல்லுகிறீர்கள். பரதேசி, வழிப்போக்கர், வெளிநாட்டவர், அறிமுகமாகாதவர், விருந்தாளி, வழிப்போக்கர் என பலவாறாக நமது சிறிய வாழ்க்கையை வேதம் வர்ணிக்கிறது. தாவீது சொன்னார் : *பூமியிலே நான் பரதேசி. (சங்.119:9).* பேதுரு வாழ்க்கையை விளக்குவதைக் கேளுங்கள்:- *இங்கே பரதேசிகளாய் சஞ்சரிக்குமளவும் பயத்துடனே நடந்துகொள்ளுங்கள்! (1பேதுரு 1:17).*

நான் வாழும் கலிபோர்னியா என்ற அமெரிக்க பிரதேசத்தில் பல நாட்டைச் சேர்ந்தவர்கள் வேலைக்காக வந்திருந்தாலும் தங்களது குடியுரிமையை தங்கள் தாய் நாட்டிலேயே வைத்துக் கொள்ளுகிறார்கள். அவர்கள் விருந்தாளிகள் என பதிவு செய்த அட்டையை (Green card) கட்டாயம் சுமந்து செல்ல வேண்டும். அதன் மூலம் அவர் குடியுரிமையில்லாவிட்டாலும் அங்கு வேலை செய்யலாம். உண்மையிலேயே நாமெல்லாரும் ஆவிக்குரிய கிரீன்கார்டுகளை பெற்றிருக்கிறோம். அது நமக்கு ஞாபகப்படுத்துவது நம்முடைய குடியிருப்போ பரலோகத்தில் என்பதே. கடவுள் சொல்லுகிறார் அவருடைய பிள்ளை அவிசுவாசிகளை விட வித்தியாசமாய் சிந்திக்க வேண்டும். வேதம் சொல்லுகிறது: *அவர்கள் பூமிக்கடுத்தவைகளைச்*

சிந்திக்கிறார்கள். நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் (பிலி 3:18,19). உண்மையான விசுவாசிகள், இந்த கோளில் வாழும் சில ஆண்டுகளைவிட மிக அதிகமாய் வாழப்போவதை உணர்ந்துகொள்ளுகிறார்கள்.

*நீங்கள் நித்தியத்தை சேர்ந்தவர்கள், **உங்கள் தாய்நாடு பரலோகமே.*** இந்த உண்மையை முழுவதும் நீங்கள் புரிந்துகொண்டால், இந்த உலகத்தில் எல்லாவற்றையும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற கவலையை விட்டுவிடுவீர்கள். இந்த உலகத்தில் இங்கே, இன்றே என்று வாழ்ந்து தங்களது மதிப்புகளை, முக்கியமானவைகளை, வாழ்க்கை தரத்தை உங்களை சுற்றியுள்ள உலகின்படி மாறி தனதாக்கி கொள்ளுகிறவர்களை கடவுள் மிக கடினமாய் அதன் ஆபத்தை எச்சரிக்கிறார். கலாச்சாரத்திற்கு ஏற்றவிதமாய், வாழ்ந்து சோதனைக்கு விட்டுக்கொடுத்து எதிர்பாலரை வசீகரிப்பவர்களை கடவுள் ஆவிக்குரிய வேசிமார்க்கத்தார் என்று கூறுகிறார். வேதம் சொல்லுகிறது: *நீங்கள் கடவுளை ஏமாற்றுகிறீர்கள். இந்த உலகத்தோடு எல்லாவிதத்திலும் சேர்ந்து எதிர்பாலரை வசீகரித்து, உங்கள் சொந்த வழியை விரும்பி, கடவுளுக்கும் அவரது வழிக்கும் விரோதியாய் கடைசியாய் மாறிவிட்டீர்கள் (யாக்கோபு 4:4).*

உங்களது தேசம் உங்களை தனது

ஸ்தானாதிபதியாக பகையான தேசத்துக்கு வைத்திருக்கிறது என்று எண்ணிக்கொள்ளுவோம். அப்போது நீங்கள் அங்குள்ள மொழி, பழக்க வழக்கம் மற்றும் கலாச்சார வித்தியாசங்கள் போன்றவற்றைக் கற்று அந்த மக்களுடன் பணிவாக நடந்தால் தான் உங்களது பணியை நிறைவேற்ற முடியும். ஸ்தானதிபதியாக இருப்பதன் மூலம் அவர் தன்னை பகைவரிடம் இருந்து தனிமைப்படுத்த முடியாது. நீங்கள் செய்ய வேண்டிய தூது பணியை (Mission) நிறைவேற்ற நீங்கள் நிச்சயமாய் மக்களோடு தொடர்பு கொண்டு அவர்களோடு உறவு கொள்ள வேண்டும்.

அதற்கு மாறாக இந்த புதிய நாட்டில் அன்புகூர்ந்து என்னை வசதியாகிக் கொண்டு, உங்கள் சொந்த நாட்டை விட இந்த நாட்டை விரும்பினால் உங்களது அர்ப்பணிப்பும் நம்பிக்கையும், உண்மையும் மாறுகிறது. ஸ்தானாதிபதி என்ற உங்கள் தூதுவர் பதவிக்கு உண்மையாய் இல்லாமல் அவர்களோடு ராசியாகி விட்டீர்கள். உங்களது தாய்நாட்டுக்கு பிரதிநிதியாய் இருப்பதை விட்டுவிட்டு, உங்கள் தாய் நாட்டின் எதிரியாக மாறுகிறீர்ள். நீங்கள்தான் துரோகியாயிருக்கீறீர்கள்.

வேதம் சொல்லுகிறது: *நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாயிருந்து... (2கொரி5:20).* வருந்தத் தக்க காரியம் என்னவென்றால் தங்களை இயேசுவின் அடியவர்கள், அவர் பாதையில் நடக்கிறவர்கள் என்பவர்கள்கூட இந்த ஆவிக்குரிய சத்தியத்தை மறந்து போகிறார்கள். இப்போது அவர்கள் இவ்வுலகில் வாழ்வதால் இதுதான் தங்களது நிலையான வீடு என்று முட்டாள்களாய்

முடிவெடுக்கிறார்கள். ஆனால் அது அப்படியல்ல பேதுரு கூறுகிறார் : *பிரியமானவர்களே, இந்த உலகம் உங்களது வீடு அல்ல, ஆகவே உங்களை நீங்களே இங்கு வசதியாக்கி கொள்ளாதிருங்கள். உங்கள் சுயப் பெருமைய திருப்தி செய்து உங்கள் ஆத்துமாவை கெடுத்துவிடாதீர்கள் (1பேதுரு 2:11).*

நம்மைச் சுற்றியுள்ள எந்த காரியத்தோடும் அதிகமாய் ஒட்டிவிடாதீர்கள் என கடவுள் எச்சரிக்கிறார். ஏனெனில் அது தற்காலிகமானது. *ஏனெனில் இந்த உலகமும், அதிலுள்ள அனைத்தும் மாறிவிடும் என்பதால், இவ்வுலகத்தோடு அடிக்கடி தொடர்புள்ளவர்கள் இவ்வுலகை நன்றாக பயன்படுத்தலாமேயல்லாமல் அதோடு ஒட்டி விடாதீர்கள் (1கொரி 7:31).*

உலகத்திலுள்ள மற்ற நூற்றாண்டுகளை ஒப்பிட்டுப்பார்க்கும்போது இப்போதுள்ள வாழ்க்கை மிகவும் கடினமாகி விட்டது. நாம் தொடர்ந்து கேளிகைக்கும், சந்தோஷப்படுத்தி கவனிக்குதலுக்கும் உள்ளாகிறோம். எல்லா அழகான கவர்ச்சிகளுக்கும் மனதை மயக்கும் யுக்திகள் மற்றும் சந்தோஷப்படுத்துகிற அனுபவங்கள் எல்லாம் இன்றைய நாளில் கிடைத்தாலும், கிடைக்கும் சந்தோஷம் மறக்கப்படுவதன் காரணம், வாழ்க்கை என்பது இவைகள் அல்ல! இந்த உலகம் ஒரு பரீட்சை, ஓர் நம்பிக்கை, ஓர் தற்காலிக பயிற்சி இது நித்தியத்திற்கு நம்மை தயார் செய்யும் இடம் என்பதை உணர்ந்து கொண்டால். நமக்கு வாழ்க்கை நலமாக மாறும். இரண்டாம் இடத்தில் உள்ளவைகள் நமது வாழ்க்கையில் உள்ள பிடியை இழந்து விடும். நாம்

மிகச் சிறந்தவைகளுக்காக நம்மை தயார் செய்கிறோம். *நாம் இன்று பார்க்கிறவைகள், நாளை இல்லாமல் போய் விடுகிறது. நாம் இன்று பார்க்காதவை நித்தியமாய் உள்ளவை (2கொரி4:18).*

நமது நித்தியமான வீடு இவ்வுலகம் அல்ல என்பதை நாம் அனுபவிக்கும் கஷ்டங்கள், நஷ்டங்கள், வெறுப்புகள் மூலம் தெரிவிக்கப்படுகின்றன. (யோ 16:33; 16:20, 15:18-19) இவைகளின் சுருக்கம். நிறைவாகாத கடவுளின் வாக்குத்தத்தங்கள், பதில் கிடைக்காத ஜெபங்கள், சாதகமில்லாத சூழ்நிலைகள், நமக்கு இவ்வுலகம் சொந்த இடமல்ல என்றே விவரிக்கிறது. இது கதையின் முடிவல்ல.

இந்த உலகில் நாம் ஒட்டிவிடாதபடி, திருப்திசெய்யா முழுமையாக்கப்படாத வாழ்க்கையை கடவுள் நமக்கு தருவதால், நித்தியத்தை இழந்து விடாதபடி காத்துக்கொள்ளுகிறார். ஏனெனில் திருப்தியான வாழ்க்கையும், முழுமையான வாழ்க்கையும் நான் அனுபவித்தால் - அவைகள் பரலோகவாசியாய் என்னை மாற்ற முடியாமல் போய் விடும். நாம் இங்கு முழுமையான மகிழ்வுடன் இருக்க முடியாது! ஏனென்றால் நாம் அப்படியிருக்கக் கூடாது! இது நமது பரலோக வீடு அல்ல. நாம் இதைவிட உன்னதமான அதிசயமான காரியத்திற்காக படைக்கப்பட்டிருக்கிறோம்.

ஒரு மீனானது நிலத்தில் வாழும்போது சந்தோஷமாய் இருக்கவே முடியாது. ஏனென்றால் தண்ணீரில் வாழுவதற்காகவே அது படைக்கப்பட்டது. ஒரு கழுகை பறக்கவிடாமல் வைத்துவிட்டால் அது

சந்தோஷமாய் இருக்க முடியாது. இவ்வுலகில் நீங்கள் முழுவதும் சந்தோஷமாய் வாழ முடியாது. ஏனென்றால் இன்றைக்காகவும், இங்கே இருப்பதற்காகவும் நீங்கள் படைக்கப்படவில்லை. உங்களுக்கு உலகில் பல சந்தோஷமான சமயங்கள் கிடைக்கும். ஆனால் கடவுள் உங்களுக்கு திட்டம் பண்ணினைவகளோடு அதை ஒப்பிடவே முடியாது.

இந்த உலகம் ஓர் தற்காலிக பயிற்சி என்பதை உணர்ந்து விட்டால் உங்களது மதிப்பீட்டில் திடீர் மாற்றம் வந்து விடும். தற்காலிகமான மதிப்புகள் அல்ல; நித்தியமான மதிப்புகளை வைத்தே உங்களது தீர்மானங்கள் அமையும். சி.எஸ் லூயிஸ் (C.S.Lewis) புரிந்தது என்னவென்றால் நித்தியமல்லாதவை எல்லாம் நித்தியமாய் உபயோகமற்றதாகும். வேதம் சொல்லுகிறது: *காணப்படுகிறவைகளெல்லாம், காணப்படாதவைகளை நோக்கியிருக்கும் நமக்கு... காணப்படுகிறவை அநித்தியமானவை, காணப்படாதவையோ நித்தியமானவை(2கொரி4:17,18)*

உலக வழக்கப்படி கர்த்தர் நம்மை ஆசீர்வதித்தல் என்பது நமக்கு பணசெழிப்பு அல்லது எல்லாரும் அறிய வெற்றியடைவது என்று நினைப்பது சாவுக்குரியதாகும். பரிபூரண வாழ்க்கையும், செல்வ செழுமையும் தொடர்புடையதல்ல. கடவுளுக்கு உண்மையாயிருந்தால் நிச்சயம் வெற்றியைத் தேடித் தரும் என்பதும் நிச்சயமல்ல. உனது வசதியிலல்ல உனது குணாதிசயத்தில் மிக அதிகம் பிரியம் கொள்ளுகிறார் கடவுள். உங்களது வாழ்க்கையை இலகுவாக்குவதில் பிரியம் காட்டுவதைவிட நீங்கள் முற்றிலும் மாறுவதை விரும்புகிறார் கடவுள்.

மறந்துவிடாதீர்கள்! வாழ்க்கை ஓர் பரீட்சை (1பேதுரு2:11).

பவுல் கடவுளுக்கு உண்மையாயிருந்தார், ஆனாலும் அவர் சிறைக்கு சென்றார். யோவான்ஸ்நானன் ஆண்டவருக்கு உண்மையாய் இருந்தார். அதற்காக சிரச்சேதம் செய்யப்பட்டார்! பல இலட்சக்கணக்கான மக்கள் கிறிஸ்துவுக்காய் இரத்தசாட்சியாயிருக்கிறார்கள். எல்லாவற்றையும் இழந்திருக்கிறார்கள், உலகத்தின் முடிவிற்கு வரும்போது உலகத்திற்கு தான் இதை சம்பாதித்து விட்டோம் என காட்டுவதற்கு ஒன்றுமில்லாது இருக்கிறீர்கள். *ஆனால் இவ்வுலக வாழ்வின் முடிவு வாழ்க்கையின் முடிவல்ல.*

கர்த்தரின் கண்களில் மிகப்பெரிய கதாநாயகன் யாரென்றால், செழிப்பை, வெற்றியை மற்றும் வல்லமையை பெற்றவர்கள் அல்ல, மாறாக இவ்வுலக வாழ்வை ஓர் தற்காலிக பயிற்சி என்று நினைத்து உண்மையாய் ஊழியம் செய்து நித்தியத்தில் நிச்சயித்த பலனுக்கு காத்திருப்பவர்களே. வேதம் இதை கடவுளின் புகழ் முத்திரை என கூறுகிறது: *இவர்களெல்லாரும், வாக்குத்தத்தம் பண்ணப் பட்டவற்றை அடையாமல், தூரத்திலே அவற்றைக் கண்டு, நம்பி அணைத்துக் கொண்டு, பூமியின்மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு, விசுவாசத்தோடு மரித்தார்கள்... அதையல்ல, ஆதியிலும் மேன்மையான பரமதேசத்தையே விரும்பினார்கள். ஆகையால் தேவன் அவர்களுடைய தேவன் எனக்கூற வெட்கப்படுகிறதில்லை; அவர்களுக்கு ஒரு நகரத்தை*

ஆயத்தம் பண்ணினாரே. (எபி 11:13,16). இவ்வுலகில் **நீங்கள் வாழும் வாழ்வு உங்களது முழுவாழ்வின் முழுகதையல்ல.** நீங்கள் பரலோகம் வரகாத்திருக்கும் போது உங்களது மற்ற அத்தியாயங்கள் திறக்கப்படும்.

அமெரிக்க ஐக்கிய நாட்டின் அதிபர் வந்த படகில் ஒருநாள் தனது இறைபணியை வேற்றுநாட்டில் முடித்து ஓய்வுவாழ்விற்காக அமெரிக்க திரும்பினவரும் இருந்தார். அமெரிக்க அதிபரை வரவேற்க ஆரவாரிக்கும் கூட்டங்கள், இராணுவ இசைக்குழுவினர், சிகப்புக்கம்பளம், கொடிகள், செய்தியாளர்கள் அவரை அழைத்துச் சென்றார்கள். ஆனால் இறைபணியாளரோ யாரும் அறியப்படாதவராய் படகிலிருந்து வீட்டிற்கு சென்றார். அவர் தன்மேல் பரிதாபப்பட்டு, வெறுப்படைந்து அவர் கடவுளிடம் குறைகூறினார். அப்போது கடவுள் அருமையாக அவருக்கு நினைப்பூட்டியது, என் மகனே! *நீ இன்னும் வீட்டிற்கு வந்து சேரவில்லை என்று.*

நான் ஏன் எனது வாழ்வில் தற்காலிகமான காரியத்திற்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தேன்? நான் என்ன நினைத்தேன்? நான் ஏன் என்னுடைய நேரம், பெலன், கரிசனைகளை செலவழித்து நித்தியமில்லாத காரியத்திற்காக வீணடித்து விட்டேனே என சாவுக்கு இரண்டு நொடிகளுக்குமுன் கதறினால் நீ பரலோகம் செல்ல முடியாது.

வாழ்க்கை கடினமாகும்போது, சந்தேகம் உங்களை எதிர்கொள்ளும்போது, கடவுள் வழி செல்வது சரிதானா, நான் எடுத்த முயற்சிகள் தகுந்ததா என்ற கேள்விகள் வரும்போது நீங்கள்

நினைவில் கொள்ள வேண்டியது என்னவென்றால் "நான் இன்னும் என் வீட்டிற்கு செல்லவில்லை" சாவில் நீங்கள் வீட்டை விடவில்லை- நீங்கள் வீட்டிற்கு *போகிறீர்கள்...*

சிந்தனை சிறக்க :

வாழ்க்கை ஒரு தற்காலிக வேலை.

கேள்விக்கணைகள் தொடுக்கலாமா?

கடவுளோடு நீங்கள் வைக்கும் உறவு மட்டுமே நிலைக்கும், நித்தியமானது என்றால், உங்களது மதிப்புகள், உங்கள் முக்கியங்கள், உங்கள் சொத்துக்கள், உங்கள் நேரப்பட்டியல் போன்றவை எப்படி பாதிக்கப்படும்?

கடவுள் உங்களது வசதியைக் காட்டிலும் உங்களது குணாதிசயத்தில் விருப்பமாயிருக்கிறார் என்ற உண்மை, உங்களது பிரச்சனைக்கு நீங்கள் கொடுக்கும் பதிலை அல்லது பார்வையை எப்படி மாற்றுகிறது?

மோட்சத்திற்கு சென்ற யாரையாகிலும் நீங்கள் அறிவீர்களா? நீங்கள் படித்த பாடத்தின் அடிப்படையில் அவர்கள் என்ன சொல்லுவார்கள் என கற்பனை செய்கிறாய்?

இந்த கேள்விகளுக்கு ஆழமான பதில் கண்டுபிடிக்க **www.purposedrivenlife.com** ஐ அணுகுங்கள்.

௭

எல்லாவற்றிற்கும் காரணம்

எல்லாமே கடவுளுக்காக...

நீங்கள் *கடவுளால்* மட்டும் படைக்கப்படவில்லை; *கடவுளுக்காகவும்* படைக்கப்பட்டிருக்கிறீர்கள். இந்த அண்டசராசரத்தின் கடைசி இலக்கு கடவுளின் மகிமையைக் காட்டுவதே. இந்த காரணத்தினால் தான் எல்லாமே இருக்கின்றது. நீங்களும் அதில் ஓர் பங்கு வகிக்கிறீர்கள், கடவுளின் மகிமை இல்லாவிட்டால் ஒன்றுமே இருக்காது.

கடவுளின் மகிமை *என்றால்* என்ன? அது கடவுள் யார் என்பதைப் பற்றியது. அது அவரது சுபாவம், அவரது குணாதிசயம், அவரது வல்லமை.

கடவுளின் மகிமை *எங்கேயிருக்கிறது?* உங்களை சுற்றிலும் பாருங்கள். கடவுள் படைத்த *ஒவ்வொன்றும்* கடவுளின் மகிமையை பிரதிபலிக்கிறது. அதை எல்லாரிடமும் பார்க்கலாம். அதாவது மிகச் சிறிய நுண்ணுயிர் முதல் பரந்து விரிந்து கிடக்கும் பால் வழி வரை, ஓர் சூரிய மறைவு மற்றும் நட்சத்திரங்கள் முதல் புயல் மற்றும் காலங்கள் வரை கடவுளின் மகிமையைப் பார்க்கலாம். படைப்பு படைத்தவரின் மகிமையைக் காட்டுகிறது. கடவுளின் குணாதிசயத்தை நீங்கள் சுற்றி பார்ப்பதின் மூலம் கண்டு கொள்ளலாம். இயற்கை மூலமாக கடவுள் வல்லவர் என்பதையும் ; அவருக்கு பல விதங்கள் பிடிக்கும் என்றும், அழகில் பிரியப்படுபவர் என்றும், ஒழுங்கானவர் என்றும்,

ஞானமும், ஆக்கப்பூர்வமானவர் என்றும் தெரிகிறது. வேதம் சொல்லுகிறது: *வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது. (சங்கீதம் 19:1).*

கடவுள் எப்படிப்பட்டவர் என்பதை எப்படி புரிந்துகொள்ளுவது? வரலாறு முழுவதும், கடவுள் தனது மகிமையை வித்தியாசமான சூழ்நிலைகளில் வெளிப்படுத்தியிருக்கிறார். ஆனால் கடவுளுடைய தெளிவான படத்தை அதாவது அவர் உண்மையாகவே எப்படியிருக்கிறார் என்பதை, அவரது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவில் பார்க்கலாம். வேதம் சொல்லுகிறது: *பூர்வகாலங்களில் பங்கு பங்காகவும் வகை வகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி காலங்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார்... இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து... (எபிரெயர் 1:1-3).*

இயேசு சொன்னார், *நானே உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கிறேன். (யோவான் 8:12).* இயேசுவினாலே இப்போது நாம் இருளில் இல்லை. கடவுள் உண்மையில் எப்படிப்பட்டவர்? வேதம் கூறுகிறது: *இவர் (இயேசு) அவருடைய (பிதாவுடைய) மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து... (எபிரேயர் 1:3).* இயேசு உலகில் வராவிட்டால் கடவுளின் பல ஆழங்களை நாம் அறிந்திருக்கவே முடியாது. இயேசு கிறிஸ்து வந்ததால் கடவுளின் மகிமையை நாம் முழுவதும் அறிந்து

கொள்ளமுடிந்தது. *வார்த்தை மாம்சமாகி (மனிதனாகி) நமக்குள்ளே வாசம்பண்ணினார். அவருடைய மகிமையைக் கண்டோம், அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது (யோவான் 1:14).*

மனிதர்கள் கடவுளால் படைக்கப்பட்டதால், நாம் கடவுளின் மகிமையை அறிந்து கொள்ள வேண்டும் என்று கட்டளை கொடுத்திருக்கிறார். அவரது மகிமையை நாம் *கனப்படுத்த* வேண்டும். *போற்ற* வேண்டும், *பிரதிபலிக்க* வேண்டும், அவரது மகிமைக்காய் வாழ வேண்டும். 1நாளாகமம் 16:24, சங்.29:1, 66: 1-2, 96:7, 2கொரி.3:18ன் தொகுப்பு. ஏன்? கடவுள் அதற்கு தகுதியானவர். நாம் கடன்பட்டிருக்கிறோம். கடவுள்தான் எல்லாவற்றையும் படைத்தார், ஆகவே அவர் மகிமையை பெற தகுதியானவர். வேதம் சொல்லுகிறது: *கர்த்தாவே, தேவரீர், மகிமையையும், கனத்தையும், வல்லமையையும் பெற்றுக்கொள்ளுகிறதற்குப் பாத்திரராயிருக்கிறீர்; நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர், உம்முடைய சித்தத்தினாலே அவை உண்டாயிருக்கிறவையும் படைக்கப்பட்டவையுமாய் இருக்கின்றன (வெளி. 4:11).*

கடவுளின் படைப்பாகிய அண்டசராசரத்திலும் இரண்டு படைப்புகள் அவருக்கு மகிமை செலுத்தத் தவறிவிட்டன: தள்ளப்பட்ட தூதர்கள் (பிசாசுகள்) நாம் (மக்கள்). அவருக்கு கொடுக்கப்பட வேண்டிய மகிமையை நாம்

கொடாவிட்டால் அது "பாவம்" ஆகும். எல்லாப் பாவங்களின் வேர் என்னவென்றால் கடவுளுக்கு தகுதியான மகிமையை அவருக்கு செலுத்தாததே. கடவுளை விட எதை அதிகமாய் நேசித்தாலும் அவருக்குரிய மகிமையை செலுத்தவில்லை என்பதே ஆகும். அவருக்குரிய மகிமையை கொடுக்க மறுப்பது, பெருமையால் நிறைந்து அவரை எதிர்ப்பதாகும். இந்த பாவமே சாத்தானின் வீழ்ச்சிக்கு காரணமாய் அமைந்தது - நம்முடையதும் அப்படியே. நாமும் பல வழிகளில் கடவுளுடைய மகிமைக்காக வாழாமல் நமது சுய மகிமைக்காக வாழ்ந்தோம். வேதம் சொல்லுகிறது: *எல்லாரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களாகி... (ரோமர் 3:23).*

நம்மில் யாரும் பாத்திரராகிய கடவுளுக்குரிய முழு மகிமையை செலுத்தவில்லை. இது நாம் செய்த மிக மோசமான பாவமும், மிகப்பெரிய தவறுமாகும். இதற்கு மாறாக கடவுளுடைய மகிமைக்காக வாழ்வது நமது வாழ்வில் அடையக்கூடிய மிகப்பெரிய சாதனையாகும். கர்த்தர் சொல்லுகிறார்: *நான் என் மகிமைக்கென்று சிருஷ்டித்து உருவாக்கி படைத்து, என் நாமந்தரிக்கப்பட்ட யாவரையும்... (ஏசாயா 43:7).* ஆகவே கடவுளுக்கு மகிமை செலுத்துவதே நம்முடைய வாழ்வின் முதல் இலக்காய் அமைந்து தீர வேண்டும்.

இயேசு, பரலோகத்திலிருக்கும் பிதாவிடம் பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன் (யோவான்17:4). இயேசுவுக்கு கொடுக்கப்பட்ட நோக்கத்தை இவ்வுலகில் செய்தது மூலம் இயேசு பிதாவை கனப்படுத்தினார். நாமும் கடவுளை மகிமைப்படுத்தும் வழி அதுவே. **படைப்பாகிய எதுவானாலும், அதனது நோக்கத்தை நிறைவேற்றுமானால், அது கடவுளுக்கு மகிமை கொண்டுவருகிறது.** பறவைகள் பறப்பதாலும், பாடுவதாலும், கூடுகட்டுவதாலும், மற்றும் பறவைக்கான காரியங்களைச் செய்வதாலும், கடவுள் நினைத்ததை நிறைவேற்றுவதாலும் அவை கடவுளுக்கு மகிமை சேர்க்கின்றன. சிறுமையான ஓர் எறும்பும் தனது நோக்கத்தை நிறைவேற்றும்போது கடவுளுக்கு மகிமை செலுத்துகிறது. கடவுள் எறும்பை எறும்பாகவும் உங்களை உங்களாகவும் படைத்திருக்கிறார். பரிசுத்த இரேனியஸ் (St.Irenaeus) கூறுகிறார்: கடவுளின் மகிமையென்றால் முழுமையாய் உயிர் வாழும் மனிதன் ஆவான்.

நோக்கம் உந்தும் வாழ்க்கை என்ற புத்தகம், எப்படி கடவுளின் ஐந்து நோக்கங்களை உங்களது வாழ்க்கையில் நிறைவேற்றலாம் என்பதைப் பற்றியது. நீங்களும் அதில் ஒரு பிரதி வாங்கி வாசிப்பீர்கள் என நினைக்கிறேன். இங்கே அந்த ஐந்து நோக்கங்களையும் சுருக்கமாக உங்களுக்கு கூறுகிறேன்.

1. ஆண்டவரை அறிவதும் அன்பு கூறுவதும் அவருக்கு மகிமை செலுத்துவதாகும். உங்கள் வாழ்க்கையின் முதல் நோக்கம் ஆராதனையாகும். *அதுவே இவ்வுலகில் உங்களது முதல் பொறுப்பாகும்.* சில மக்கள் வாழ்க்கையில் மிக முக்கிய காரியத்தை நழுவவிட்டு விட்டனர். அது என்னவெனில் அவர்கள் கடவுளை அறியாதிருக்கின்றனர் *(1தீமோத்தேயு 6:21).* உங்களுக்கு பல காரியங்களைப் பற்றி அதிகமான அறிவு இருக்கலாம், ஆனால் கடவுளைப்பற்றி உங்கள் தனி வாழ்க்கையில் நீங்கள் அறியாவிட்டால் நீங்கள் படைக்கப்பட்ட முதல் நோக்கத்தை தவற விட்டீர்கள்.

சபைக்கு செல்லுவதைவிட முக்கியமானது ஆராதனையாகும். வாழ்நாள் முழுவதும் கடவுளில் *மகிழுவது, அன்புகூருவது,* நம்மையே அவருடைய நோக்கத்திற்காக *கொடுப்பது* ஆராதனையாகும். அவரில் மகிழுவதின்மூலம் அவரை ஆராதிக்கிறோம். சி.எஸ். லூயிஸ் சொன்னார், தன்னை மகிமைப்படுத்த கடவுள் கட்டளை கொடுப்பதே நாம் அவரில் மகிழந்திருக்கவே ஆகும். கடவுள் நமது ஆராதனை அன்பின் தூண்டுதலாக, நன்றி பெருக்கினால், அவரில் மகிழ, கடமைக்காக அல்லாமல் செய்ய விரும்புகிறார். உங்களது வாழ்க்கையை கடவுளின் மகிமைக்காய் பயன்படுத்தும்போது, நீங்கள் செய்யும் எல்லாமே ஆராதனையாய் மாறுகிறது. வேதம் சொல்லுகிறது:.. *உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக*

*ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று; தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன் ; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. ரோமர் 12:1.*நீங்கள் இந்த முதலாவது நோக்கத்தை நிறைவேற்றாவிட்டால் மற்ற நான்கு நோக்கங்களை நிறைவேற்ற முடியாது.

2. கடவுளின் குடும்பத்தில் உள்ள மற்றவர்களிடம் அன்புகூருவதால் நீங்கள் கடவுளை மகிமைப்படுத்துகிறீர்கள். இரண்டாவது கடவுளின் நோக்கம் *ஐக்கியமாகும்.* அது நித்தியத்திற்கு நம்மை தயார் செய்வது ஆகும். ஏனென்றால் கடவுளின் குமாரனாகிய இயேசுவை ஏற்றுக்கொண்டவர்கள் பரலோகத்தில் ஒருவரோடொருவர் ஐக்கியம் கொள்ளுவார்கள்.

நீங்கள் உங்கள் வாழ்க்கையை கிறிஸ்து இயேசுவுக்கு அர்ப்பணிக்கும் போது நீங்கள் கடவுளின் குடும்பத்தில் அங்கம் ஆகிறீர்கள். கடவுள் உங்களுக்கு விரும்பின மகிழ்ச்சியான வாழ்க்கை அது விசுவாசிப்பதில் மட்டுமல்ல, நான் அவருடையவன் என்பதிலும் உள்ளது. ஏன்? ஏனென்றால் நேசிக்க கற்பது முக்கியமான பாடங்களில் ஒன்றாகும். நித்தியத்திற்கு வருமுன் இந்த பாடத்தை கற்றுக்கொள்ள வேண்டுமென கடவுள் விரும்புகிறார். பரிசுத்த யோவான் எழுதினார்: *நாம் சகோதரரிடத்தில் அன்பு கூறுகிறபடியால் மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டருக்கிறானென்று அறிந்திருக்கிறோம்; சகோதரனிடத்தில் அன்பு கூறாதவன் மரணத்திலே*

நிலைகொண்டிருக்கிறான் (1யோவான் 3:14) பவுல் *கூறினார்: ஆதலால் தேவனுக்கு மகிமையுண்டாக, கிறிஸ்து நம்மை ஏற்றுக்கொண்டது போல, நீங்களும் ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளுங்கள். (ரோமர்15:7).*

உங்களது இரண்டாவது பெரிய பொறுப்பு கடவுள் அன்பு கூறுகிறது போல நீங்கள் பிறரை நேசிக்க வேண்டும். ஏனென்றால் கடவுள் அன்பாகவே இருக்கிறார், உங்களையும் அவரைப் போலவே இருக்க விரும்புகிறார். ஆகவே தான் நீங்கள் உங்கள் அருகில் உள்ள சபையில் அங்கத்தினராகி, ஆவிக்குரிய குடும்பத்தில் ஒருவராயிருப்பது அத்தியாவசியமானது. நாம் ஒவ்வொருவரும் தேவை என்பதற்காகவே படைத்தார். அதுவே நாம் அவரை அறிந்ததின் அடையாளம் என இயேசு கூறுகிறார். *...நான் உங்களில் அன்பாயிருந்தது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்...... நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள் என்றார் (யோவான்13:34-35).*

3. இயேசுவைப் போல மாறுவதால் நீங்கள் கடவுளுக்கு மகிமை சேர்க்கிறீர்கள். நாம் நம்மை கிறிஸ்துவிற்கு அர்ப்பணித்ததின் மூலம் ஆவியினால் பிறந்து கடவுளின் குடும்பத்தில் அங்கத்தினராகிறோம். கடவுள் நம்மை ஆவிக்குரிய முதிர்ச்சியில் முன்னேற வேண்டுமென விரும்புகிறார். ஆவிக்குரிய முதிர்ச்சி

இயேசுவைப் போல மாறி அவரைப் போல சிந்தித்து, அவரைப் போல உணர்ந்து செயலாற்ற வேண்டும். நீங்கள் இயேசுவைப் போல மாற, மாற கடவுளுக்கு மகிமை சேர்க்கிறீர்கள். வேதம் சொல்லுகிறது: *ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்த சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப் படுகிறோம் (2கொரி 3:7).*

கடவுள் உங்களுக்கு புது வாழ்வையும், புது சுபாவத்தையும் நீங்கள் இயேசுவை ஆண்டவராக ஏற்றுக் கொண்ட போது கொடுத்தார். அதன் பிறகு இவ்வுலக வாழ்வு முடியுமட்டும், அவர் உங்களது குணம் மாறிக் கொண்டேயிருக்க வேண்டும் என விரும்புகிறார். வேதம் சொல்லுகிறது: *இரட்சிப்பின் கனியால் நிரப்பப்படுங்கள்- இயேசு கிறிஸ்துவினால் நல்ல காரியங்களை உற்பத்தியாக்குங்கள் - இப்படி செய்வதால் மகிமையும் துதியும் கடவுளுக்கு சேர்ப்பீர்கள் (பிலி. 1:11* யோவான்-15:8 ஐ தழுவினது). கடவுள் மற்றவர்கள், பரிசுத்த வேதம், சூழ்நிலைகள், நேரம் முதலான பலவிதமான கருவிகளை பயன்படுத்தி ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்த்து, உங்களை நித்தியத்திற்கு தயார்படுத்துகிறார்.

4. மற்றவர்களுக்கு பணிசெய்வதின் மூலமாய் ஆண்டவருக்கு மகிமை சேர்க்கிறீர்கள்:மறுபடியும் இது நித்தியத்திற்கான பயிற்சியே. பரலோகத்தில் நாம் ஆண்டவருக்கு பணி செய்வதில் களிகூறப் போகிறோம். ஆகவே ஐந்து நோக்கங்களில் ஒன்று இந்த உலகில் வாழும்போது நீங்கள் அதற்கு நேரம்

செலவழித்து சிறப்பானவர்களாய் மாறுங்கள். நிச்சயமாய் கடவுளுக்கு (பார்க்கமுடியாதவருக்கு) பணி செய்ய ஒரே வழி மற்றவர்களுக்கு (பார்க்கமுடிந்தவர்களுக்கு) சேவை செய்வதாகும். அதற்காகவே தான் கடவுள் குறிப்பிட்ட தாலந்துகளை உங்களுக்கு கொடுத்திருக்கிறார்.

கடவுள் உங்களை, உங்கள் தாலந்துகளாலும், வரங்களினாலும், திறமைகளாலு ம், தகுதிகளாலும், கலாச்சாரத்தின் மூலமாகவும் கடவுள் உங்களை மற்றவர்களுக்கு பணி செய்ய வனைந்திருக்கிறார். மற்றவர்களுக்கு பணி செய்யதை வேதம் ஊழியம் என அழைக்கிறது. பலர் நினைக்கும்படி கடவுள் ஒவ்வொருவரையும் ஊழியத்திற்கென்று பிணைத்திருக்கிறார், அல்லது பணிசெய்ய ஊழியம் தந்திருக்கிறார் என்பது அல்ல, ஆனால் நீங்கள் இணைக்கப்பட்டிருப்பது ஓர் விபத்தல்ல, அது திட்டமிட்டதே ஆகும்.

உங்களது திறமைகளை உங்கள் சுய நோக்கத்திற்கென்று கொடுக்கவில்லை. மற்றவர்கள் உங்களுக்காக திறமை வைத்திருக்கிறது போலவே உங்கள் திறமைகளை மற்றவர்களுக்காகவே கடவுள் கொடுத்திருக்கிறார். வேதம் சொல்லுகிறது; *கடவுள் ஒவ்வொருவருக்கும் பல வரங்களை பல வித்தியாசங்களுடன் கொடுத்துள்ளார். அவைகளை கடவுளுடைய ஒத்தாசையினால் ஆளும் திறமையும் நமக்கு கொடுத்திருக்கிறார்... நீங்கள் மற்றவர்களுக்கு பணிவிடை செய்ய அழைக்கப்பட்டிருக்கிறீர்களா?*

கடவுள் கொடுக்கும் பெலத்தினாலும் வல்லமையோடும் பலமாய் செய்யுங்கள். அப்போது கடவுளுக்கு மகிமை சேரும் (1பேதுரு 4:10,11, 2கொரி8:19).

5.மற்றவர்களுக்கு இயேசுவைப் பற்றி பகிர்வதின் மூலம் கடவுளுக்கு மகிமை சேர்க்கிறீர்கள்:-

கடவுள் தனது அன்பையும்,நோக்கத்தையும் இரகசியமாய் வைக்க விரும்பவில்லை. நமக்கு உண்மை தெரிந்தவுடன் அதை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறார். இயேசுவை மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்தி, அவர்களது வாழ்க்கையின் நோக்கத்தை கண்டுபிடிக்க வைத்து, அவர்களை நித்தியத்திற்கென தயார்செய்வது ஓர் மிகப் பெரிய பாக்கியம் ஆகும். *கடவுளின் கிருபையினால் அதிகமதிகமான மக்களை கிறிஸ்துவுக்காய் வழி நடத்தும்போது...... கடவுள் அதிகமதிகமாய் மகிமைப்படுவார் (2கொரி. 4:15).*

மீதமுள்ள வாழ்க்கை கடவுளின் மகிமைக்காக வாழவேண்டும் என்றால், உங்களுக்கு முக்கியமாய் தோன்றுகிறதில் அதாவது உங்கள் நேரப்பட்டியலில், உங்கள் உறவில் மற்றெல்லாவற்றிலும் ஓர் மாற்றம் தேவை என்கிறார் கடவுள். அது சாதாரணமாக ஓர் சுலபமான வழியாய் இருக்காது மாறாக கடினமான வழியையே தெரிந்தெடுக்க வேண்டியதாயிருக்கும். இயேசுவே இதில் போராடினார். தான் சிலுவையில் அறையப்படப்போவதை அறிந்தவுடன், கதறி

சொன்னது: *இப்போது என் ஆத்துமா கலங்குகிறது, நான் என்ன சொல்லுவேன். பிதாவே, இந்த வேளையினின்று என்னை இரட்சியும் என்று சொல்வேனோ; ஆகிலும், இதற்காகவே இந்த வேளைக்குள் வந்தேன். பிதாவே, உமது நாமத்தை மகிமைப்படுத்தும் என்றார். (யோவான் 12:27,28).*

இரண்டாக பிரியும் சாலையின் இடையில் இயேசு நிற்கிறார். அவரது வாழ்க்கையின் நோக்கத்தை நிறைவேற்றி, கடவுளுக்கு மகிமை கொண்டு வருவாரா அல்லது பின்னடைந்து, வசதியான, சுயத்தை மையமாய் கொண்ட வாழ்க்கை வாழ்வாரா? நீங்களும் இப்படிப்பட்ட தருணங்களை சந்திக்கிறீர்கள். உங்களது சுய இலக்குக்காக, வசதிக்காக, சந்தோஷத்திற்காக வாழ விரும்புகிறீர்களா, அல்லது உங்களது வாழ்க்கை முழுவதும் அவர் நமக்கு வாக்குதத்தம் பண்ணின நித்திய பலனை நினைத்து அவர் மகிமைக்காக வாழப் போகிறீர்களா? வேதம் சொல்லுகிறது: *தன் ஜீவனை சிநேகிக்கிறவன் அதை இழந்து போவான்; இந்த உலகத்தில் தன் ஜீவனை வெறுக்கிறவனோ அதை நித்திய ஜீவ காலமாய்க் காத்துக் கொள்ளுவான். (யோவான் 12:25).*

இந்த பிரச்சனையை தீர்க்கும் நேரம் இது யாருக்காக நீங்கள் வாழப்போகிறீர்கள்- உங்களுக்காகவா, அல்லது கடவுளுக்காகவா? கடவுளுக்காக வாழுவதின் பெலன் என்னிடம் இருக்கிறதா என்று ஆச்சரியப்பட்டு தயக்கம்

கொள்ளலாம். நீங்கள் கவலைப்பட வேண்டாம். நீங்கள் அவருக்காகவே வாழவேண்டும் என்று தீர்மானித்து விட்டால், கடவுள் உங்களுக்கு தேவையானதை கொடுக்க ஆயத்தமாயிருக்கிறார். வேதம் சொல்லுகிறது: *கடவுளை பிரியப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தால் முழுவதும் அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கை அற்புதமாய் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன் மூலம் நம்மை கடவுளிடம் அழைத்தவரை அறிந்து கொள்ளவும், தனிப்பட்ட விதத்திலே அவரை புரிந்து அவரோடு நெருங்கிப்பழகவும் நமக்குத் தருணம் கிடைத்தது. 2 பேதுரு - 1:3* ன் விளக்கம்

நீங்கள் அர்ப்பணிப்பதற்கு முன்பாக உங்களது எல்லா கேள்விகளுக்கும் பதில் கொடுக்க வேண்டும் என்று எண்ணாதிருங்கள். உங்கள் வாழ்க்கை முழுவதிலும் உங்களுக்கு கேள்விகள் இருந்து கொண்டேதான் இருக்கும். நான் கிட்டத்தட்ட நாற்பது வருடங்களுக்கு மேலாக இயேசுவை பின்பற்றுகிறேன், இருந்தாலும் எனக்கு இன்னும் கேள்விகளும் சந்தேகங்களும் வேத எழுத்துக்களை வாசிக்கும் வேளையில் எழும்புகிறது. ஆனால் அந்த கேள்விகள் நான் இயேசுவிடம் வைத்திருக்கும் மகிழ்ச்சியான உறவை பாதிக்கவில்லை. ஒர் உந்து வண்டியினுள் இயந்திரம் எப்படி வேலை செய்கிறது என்று தெரியாமலேயே உந்து வண்டியின் பலனை நான் அனுபவிக்க முடியும். எப்படி எனது வயிறு செரிமாணம் என்று தெரியாமலே நான் இறைச்சியை உண்டு மகிழ

முடியும். அதே போல எனக்கு இருக்கும் கேள்விகள் மற்றும் சந்தேகங்கள் நடுவே நான் இயேசு கிறிஸ்துவை என் சொந்த வாழ்வில் ஏற்றுக் கொள்ளுகிறேன் என்று யாராகிலும் சொன்னால் எவ்வளவு சிறப்பாக இருக்கும். அவரை நீங்களும் அப்படியே ஏற்றுக் கொள்ளலாம்.

இப்போதே கடவுள் உங்களை அவருடைய மகிமைக்காகவும், உங்கள் வாழ்க்கைக்காக அவர் வைத்திருக்கும் நோக்கத்தை நிறைவேற்றவும் அழைக்கிறார்;உண்மையில் வாழுவதற்கான ஒரே வழி இதுதான். மற்றவையெல்லாம் உங்களை வாழவைக்காது. இயேசு கிறிஸ்துவுக்காக உங்களை முழுவதும் ஒப்புக் கொடுக்கும் போது உண்மையாய் வாழ ஆரம்பிக்கிறீர்கள். இதை நீங்கள் செய்யாதிருந்தால், அல்லது செய்ததின் தெளிவு இல்லாவிட்டால் நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் அவரை ஏற்றுக் கொள்ள வேண்டும், விசுவாசிக்க வேண்டும். வேதம் உறுதி அளிக்கிறது, *அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்.* நீங்கள் கடவுள் வழங்கும் இந்த பரிசை ஏற்றுக் கொள்ளுவீர்களா?

முதலாவதாக **நம்புங்கள்***. கடவுள் உங்களை நேசிக்கிறார் என்றும் உங்களுக்கென்று ஓர் நோக்கத்தை வைத்திருக்கிறார் என்றும் நம்புங்கள்.*எதிர்பாராத மக்கள் நீங்கள் அல்ல. நீங்கள் என்றென்றும் வாழும்படி படைக்கப்பட்டவர்கள். உங்களை இயேசுவோடு அதாவது உங்களுக்காக சிலுவையில் அறையுண்ட-வருக்காக உறவு கொள்ளும்படி தெரிந்து கொண்டார் என நம்புங்கள். நீங்கள் என்ன செய்தாலும், கடவுள் உங்களை மன்னிக்க விரும்புகிறார் என நம்புங்கள். அவர் உங்களை மன்னிக்கும்படியாகவும், வாழ்க்கை மாற்றத்திற்கான உதவி செய்யும்படியாகவும் கேளுங்கள் - நிச்சயம் அவர் செய்வார்.

இரண்டாவதாக ***ஏற்றுக் கொள்ளுங்கள்.*** *இயேசு கிறிஸ்துவை உங்களது வாழ்க்கையில் ஆண்டவராக (ஆளுபவராக, மேலாளராக, அதிகாரியாக, உங்கள் வாழ்க்கையெல்லாம் அவருடைய ஆளுகைக்கு உட்பட்டதாக) இரட்சகராக (நாம் செய்த, செய்யப்போகிற எதுவாக இருந்தாலும், அதனால் வரும் தண்டனையிலிருந்து நம்மை மீட்பதற்கு தமது உயிரையே பணையம் வைத்தவர், பரிகாரியானவர் நரகத்திலிருந்து நம்மை விடுவித்தவர்)* ஏற்றுக் கொள்ளுங்கள், அவர் உங்களது பாவத்திற்கு கொடுக்கும் மன்னிப்பை பெற்றுக்கொள்ளுங்கள். அவர் கொடுக்கும் நோக்கத்தையும், சமாதானத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள். வேதம் சொல்லுகிறது: *யாரெல்லாம் குமாரன் (இயேசு கிறிஸ்துவை) ஏற்றுக்கொண்டு, எல்லாவற்றிற்கும் அவரில் நம்பிக்கை வைக்கிறார்களோ, வாழ்க்கை*

முழுமை பெற்று எப்போதும் நிலைத்திருக்கிறது - யோவான்-3:36 ன் விளக்கம்.

நீங்கள் இப்போதே, இதை வாசித்து கொண்டு எங்கிருந்தாலும், உங்கள் தலையை வணங்கி, கீழ்காணும் பிரார்த்தனையை உங்களுடைய நித்திய வாழ்க்கைக்காக அமைதியாய் சொல்லுங்கள்:

இயேசுவே! நான் உம்மை நம்புகிறேன்... உம்மை ஏற்றுக்கொள்ளுகிறேன். என்னுடைய எல்லா பாவங்களுக்காக நீர் சிலுவையில் மரித்தீர் அதற்காக நன்றி. எனக்கு புரிந்த வரையில், நான் கேட்பது: எனது வாழ்க்கையில் நீர் வந்து, நான் உம்மை அறிந்துகொள்ள, உம்மில் நம்பிக்கைகொள்ள, உம்மில் அன்புகூரக் கேட்டுக்கொள்கிறேன்.

தொடர்ந்து ஜெபியுங்கள்!

நீங்கள் இந்த ஜெபத்தின் கருத்தை உணர்ந்து ஜெபித்தீர்களென்றால் உங்களுக்கு எனது வாழ்த்துக்கள்! உங்களை கடவுளின் குடும்பத்தில் அங்கத்தினராய் வரவேற்கிறேன். உங்களது வாழ்க்கையின் நோக்கத்தை கண்டுபிடித்து, ஒரு புது வாழ்க்கையை தொடங்கிவிட்டீர்கள். யாரிடமாவது உங்களுக்கு கிடைத்த அனுபவத்தை பகிர்ந்து கொள்ள உங்களை உற்சாகப்படுத்துகிறேன். உங்களுக்கு உதவி தேவைப்படும், நீங்கள் எங்களை **www.purposedrivenlife.com** என்னும் இணையதளத்திலோ அல்லது **info@purposedrivenlife.com** என்னும் மின்னஞ்சல் முகவரியிலோ நேரடியாகத்

தொடர்பு கொள்ளலாம். நீங்கள் வாழ்க்கையில் எடுத்த முடிவை எங்களோடு பகிர்ந்துகொண்டால் உங்களுக்கு மேலும் சில இலவசப் புத்தகங்களை அனுப்பி, நீங்கள் தொடக்கிய இந்த புதிய ஆவிக்குரிய வாழ்க்கைக்கு உதவி செய்ய ஆயத்தமாயிருக்கிறோம்.

சிந்தனை சிறக்க: யாருக்காய் வாழப் போகிறீர்கள் - உங்களுக்காகவோ, கடவுளுக்காகவா?

கேள்விக்கணைகள் தொடுக்கலாமா?

- மேலே படித்த *பிரார்த்தனையை* செய்தீர்களா?
- நீங்கள் கிறிஸ்துவிற்கு உங்களது வாழ்க்கையை இன்னும் திறக்கவில்லையென்றால், நீங்கள் எதற்காக காத்துக் கொண்டிருக்கிறீர்கள்.
- நீங்கள் இயேசுவை பின்பற்றி ஓர் நோக்கம் உந்தும் வாழ்க்கை வாழ வேண்டும் என்று எடுத்த முடிவை யாரிடம் பகிர்ந்து கொள்ள போகிறீர்கள்? நீங்கள் ஓர் பட்டியலிடுங்கள். ஒருவரிடம் இன்றே பகிர்ந்து கொள்ளுங்கள்.

இந்த கேள்விகளுக்கு ஆழமான பதில் கண்டுபிடிக்க **www.purposedrivenlife.com** ஐ அணுகுங்கள்.

இன்று உலகத்தில் அதிகமாய் விற்பனையாகும் **நோக்கம் உந்தும் வாழ்க்கை** புத்தகத்தை உங்கள் புத்தக நிலையத்தில் தேடி, வாசியுங்கள் அல்லது இணையத்தின் (online) மூலம் பெற்றுக்கொள்ளுங்கள்.

ZONDERVAN
GRAND RAPIDS, MICHIGAN 49530 USA

நான் வேண்டுமென்றே பலதரப்பட்ட வேதாகம மொழிபெயர்ப்புகளை பயன்படுத்தியதன் இரண்டு நோக்கங்கள்! முதலாவது, ஒரு மொழிப்பெயர்ப்பு எவ்வளவுதான் அற்புதமாயிருந்தாலும், அதிலும் சில காரியங்கள் முற்று பெறுவதில்லை. இரண்டாவதாக, நமக்கு தெரிந்த வசனத்தின் முழுவீரியத்தை நாம் அறிந்துகொள்ளுவதில்லை என்பது மிகமுக்கியமானது, அது சரியாக மொழிபெயர்க்கப்படவில்லை என்பதாலே அல்ல. ஏனென்றால், அதை வாசித்து வாசித்து பழகிவிட்டோம்! எனக்கு அது தெரிந்த வசனம், அந்த வசனத்தை பலமுறைக் கேட்டிருக்கிறேன், எனக்கு அந்த வசன்ம் என்ன சொல்லுகிறதென்று தெரியும் என நினைக்கிறோம். அதே வசனத்தை ஓர் புத்தக ஆசிரியர் கையாளும் போது அந்த வசனத்தை கடந்து சென்று அந்த வசனத்தின் ஆழத்தையிழந்து விடுகிறோம். ஆகவே வேண்டுமென்றே நான் அந்த வசனத்தை விளக்கும் அர்த்தத்தை நீங்கள் உணர்ந்து அறிந்து கொள்ள வேண்டும், அவரது புதிய, மறக்கமுடியாத வழிகளை உணர்ந்து கொள்ள வேண்டும் என்றே எழுதுகிறேன்.

கி.பி. 1560க்கு முன்பாக வேதத்தில் வசனங்கள் பிரிக்கப்படாமலும், எண்கள் குறிப்பிடப்படாமலும் இருந்த காலத்தில் இருந்தது போல இப்போதும் முழு வசனத்தையும் எழுதாமல் தேவையான வாக்கியங்களை மட்டும் கையாண்டிருக்கிறேன். இயேசுவும், அப்போஸ்தலர்களும் பழைய ஏற்பாட்டை கையாண்ட விதத்தையே மாதிரியாய் கொண்டுள்ளேன். அவர்கள் சாதாரணமாக ஒரு வாக்கியத்தையே மேற்கோள்காட்டி சொல்ல வேண்டிய கருத்தைக் கூறினார்கள்.

The Purpose Driven® Life

WHAT ON EARTH AM I HERE FOR?

RICK WARREN



0-310-27329-3

The Purpose Driven Life takes the groundbreaking message of the award-winning *Purpose Driven Church* and goes deeper, applying it to the lifestyle of individual Christians. This book helps readers understand God's incredible plan for their lives. Warren enables them to see "the big picture" of what life is all about and begin to live the life God created them to live.

The Purpose Driven Life is a manifesto for Christian living in the twenty-first century – a lifestyle based on eternal purposes, not cultural values. Using biblical stories and letting the Bible speak for itself, Warren clearly explains God's five purposes for each of us:

We were planned for God's pleasure – experience real worship.

We were formed for God's family – enjoy real fellowship.

We were created to become like Christ – learn real discipleship.

We were shaped for serving God – practice real ministry.

We were made for a mission – live out real evangelism.

***The Purpose Driven Life* is available at OM Books stores and other retail outlets near you.**
Contact: sales@ombooks.org
Tel: 040-27861282/27866243

நீங்கள் எதிர்பாராத விபத்தல்ல!

இந்த சிறுகையேடு வாழ்க்கையின் முக்கியமான மூன்று கேள்விகளுக்கு விடை தருகிறது.

நான் ஏன் உயிரோடிருக்கிறேன்? நான் இருப்பதின் அர்த்தம்.
எனது வாழ்க்கை கருத்தானதா? என் முக்கியத்துவத்தின் அர்த்தம்.
எனது வாழ்வின் நோக்கம் என்ன? என் உத்தேசத்தின் அர்த்தம்.

உங்கள் வாழ்வின் நோக்கத்தை அறிந்தால்
உங்கள் வாழ்க்கை சுலபமாகிவிடும்
அழுத்தத்தை குறைக்கலாம்
உங்கள் சக்தியை ஒருமுகப்படுத்தலாம்.
உங்கள் வாழ்க்கையின் அர்த்தத்தைக் கொடுக்கலாம்.
நித்தியத்திற்கு நீங்கள் தயாராகலாம்.

கோடிக் கோடியான மக்களின் வாழ்க்கையை மாற்றின காரியங்களை கண்டுபிடியுங்கள். இந்த சிறு புத்தக கையேடு நோக்கம் உந்தும் வாழ்க்கை என்ற புத்தகத்தின் சராம்சம் ஆகும். நோக்கம் உந்தும் வாழ்க்கை என்ற புத்தகம் 2003 மற்றும் 2004ம் வருடங்களில் உலகிலேயே அதிகமாய் விற்பனையான புத்தகமாகும்.

ISBN 0-310-60938-0
9 780310 609384

ZONDERVAN®
www.zondervan.com